ஓம்
திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு சா	மெய்கண்டான்யாண்டு-எ௱ரு சித்திரைத்திங்கள் 1928ஆ ஏப்ரல்—மேமீ	பரல் ச

திருச்சிற்றம்பலம்

பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய்
மண்ணிடை யடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

நம்பிகள்

உரை :

விண்ணுலகத்திலுஞ் சிறப்படையத் தக்க திருக்குருகாவூர் வெள்ளடை யென்னுந் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானே! நீயல்லவா மண்ணுலகத்திலுள்ள அடியார் பெருமக்களின் நெஞ்சத்துக்கு மலத்துன்பம் உண்டாகாதபடி பண்ணிசையிற் பொருந்திய தமிழுக்கு ஒப்பாயும், பழத்திற் பொருந்திய சுவைக்கு ஒப்பாயும், கண்ணிற் பொருந்திய மணிக்கு ஒப்பாயும், தடித்த இருட்குழம்பிற் பொருந்திய தீப்பிழம்புக்கு ஒப்பாயும் விளங்குகின்றனை? யென்பது.

இடை - ஏழனுருபு. கடு விருள் - மிக்க விருள், அதாவது அடர்ந்த விருள். மனத்திடர் - மலம். சிவபெருமானே, விளங்குகின்றனை யென்பன சொல்லெச்சங்கள்.

பண்ணுந் தமிழும் வெறும் பருப்பொருளளவினவாயில்லாது உணர்வு ஒன்றினாலேயே உணர்ந்து நுகரத்தக்க நுண்பொருளளவினவாயிருக்கின்றன. பழச்சுவைக்கு உள்ளுணர்ச்சியோடு புலனுணர்ச்சியும் வேண்டப்படுகின்றது. ஆகவே இவ்விரண்டும் உணர்விறந்த உணர்வு ஒன்றே நிகழும் வீடுபேற்றுயிர்கட்கும் அவ்வுணர்ச்சியோடு புலனுணர்ச்

சியும் ஒருங்கு நிகழுந் தூ (சுத்த) நிலை யுயிர்கட்கும் முறையே இறைவன் அருள் செய்யும் நிலைகளைக் குறித்தன.

கண்ணுங் கண்மணியும் வெறும் புலன்களாகவும், இருளும் சுடரும் தம்முள் எதிர்மாறாக முரணிய வெறுந் தன்மைக் கருத்தினவாகவு மிருத்தலால், இவ்விரண்டும் முறையே உடல் (சகல) நிலை யுயிர்கட்கும், மல (கேவல) நிலை யுயிர்கட்கும் இறைவன் அருள் செய்யும் நிலைகளை யுணர்த்தின வென்க. இவற்றின் விளக்கம் விரிப்பிற் பெருகும்.

"பருகா அமிர்தமாம் பாலில் நெய்யாம்
பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணாம்"

என்பது அப்பர் திருமொழி.

கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவமாகா

[மறைமலையடிகள்]

(௩௧-ம் பக்கத் தொடர்ச்சி)

தவமுயற்சியைச் செய்வார்களெல்லாந் தாஞ் செய்யும் அம் முயற்சியினாலேயே தாங்கள் எண்ணியவைகளை எண்ணியபடியே பெறுதல் கூடுமென்றும், பிறரை வாழ்வித்தலுந் தாழ்வித்தலுந் தம் சொல்லளவினாலேயே நிகழுதல் கூடுமென்றும், வேறு எம் முயற்சிக்குங் கிட்டாத கடவுளைத் தமது தவமுயற்சியினாலேயே எளிதிற் கிட்டச்செய்தல் கூடுமென்றும் முனைப்புடன் நினைந்து செருக்குடையராய் நிற்றலால், அவ்வருந்தவத்தோர் காட்சிக்குங் கடவுள் புலப்படாதவனாய்த் தன்னை யொளிப்பன். தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரும் யான் எனது என்னுஞ் செருக்குடையவர்கள் செய்யுந் தவமுயற்சிகளெல்லாந் தேவர்களுறையுந் துறக்க வுலகங்களிற் செலுத்துமென்றும், அவ்விரு வகைச் செருக்கும் அற்று முழுதும் அன்புருவாய் நின்றவர்களே வானோர்க்கு மேலான இறைவன்றன் பேரின்ப வுலகப்பேற்றினை யெய்துவ ரென்றும் நன்கு வலியுறுத்தி

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

என்று அருளிச்செய்தனர். நமது உலகிய லொழுக்கத்திலுந் தம்மையுந் தமதறிவையுந் தமது முயற்சியையுமே பெரியன வாகக் கருதி இறுமாந்து நிற்பவர்கள் பிறர்பால் அன்புடைய ராய் ஒழுகுதலைக் காண்கிலமன்றோ? அன்பும் செருக்கும் ஒளி யும் இருளும்போலத் தம்மில் மாறுபட்ட இயற்கையினவாகும். அன்பு நிகழுமுள்ளத்தில் இறுமாப்பு உண்டாகமாட்டாது;

இறுமாப்பு மீதெழுந்து நிற்கு முள்ளத்திலோ அன்பு ஒரெட்டு ணையுந் தலைக்காட்டமாட்டாது. ஆதலால் தவமுயற்சியானது மிகவும் பாராட்டற்பால தொன்றேயாயினும், அஃது ஏனை உலகியல் முயற்சிக ளெல்லாவற்றையும்விட மிகச் சிறந்ததேயாயி னும் அது நிகழுங்கால் யான் எனதென்னுஞ் செருக்கும் அத னோடு உடன் நிகழுதலின் அம்முயற்சியுடைய முனிவர்க்கும் இறைவன் புலப்பட்டுத் தோன்றுது ஒளிப்ப னென்றுர். இவ் வுண்மை ஆசிரியர் திருமூலநாயனாராலும்

"என்பே விறகாய் இறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை யெய்தவொண் ணுதே"

என்று நன்கெடுத்துக் காட்டப்பட்டது. பிற்காலத்திருந்த தாயு மானச் செல்வரும்,

"அருளா லெவையும்பா ரென்றான்—அத்தை
அறியாதே சுட்டியென் னறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லாற்—கண்ட
என்னையுங் கண்டிலேன் என்னேடி தோழி"

என்றருளிச்செய்தார். யானெனதென்னுந் தலையெடுப் புடைய வர்களுக்கு உலகத்தவர் நேசத்தைப் பெறுதலும் இயலாதிருக்கை யில், அதைச் சிறிதேனும் உடையவர்கள் அவ்விருளுக்குள் மறை ந்த ஒளிபோற் புலப்படாது நிற்கும் இறைவனை யாங்ஙனங் காண் பர்? அன்பினால் அகங்கரைவா ரிடத்து எத்தகைய இறுமாப் பும் இல்லாமையின், அவர்பால் எல்லாரும் அன்பு நிகழப் பெறு கின்றனர். இந்நிகழ்ச்சியோ டொப்பவே எல்லாம்வல்ல இறை வனும் அன்புடையார்க்கு மட்டுமே அணுக்கனாய் நின்று அருள் புரியும் நீர்மையனாவன். இவ்வாற்றால், அன்புநிலை யொன்றே தவநிலையினும் மேற்பட்டதாகும். அன்புநிலை யொன்றே தவ நிலைக்கு மெட்டாத முதல்வனைத் தன்னகப்படுத்துவதாகும். தவநிலையோ முயற்சியுடையது. அன்புநிலையோ முயற்சியற் றது. முயற்சியுடையார் முயன்ற பொருளைப் பெறுவது இயல்பாயிருக்கத் தவமுயற்சியுடையார் கடவுளை யெய்தாமையும் அத்தகைய முயற்சியில்லாத அன்பராயினார் ஆண்டவனைக் காண் டலும் வியக்கற்பாலனவா மல்லவோ? ஆயினும் முயற்சியாற் பெறப்படுவனவெல்லாம் காலத்தினெல்லையினும் இடத்தினெல் லையினும் அகப்பட்ட வரம்புடைப் பொருள்களாய் அழியுந் தன்மையவாய் மாறுந் தன்மையவாய் இருத்தலால், காலத்தைக் கடந்தும் இடத்தைக் கடந்தும், அழிவின்றியும் மாறுதலின்றி யும் வரம்பிலனாய் விளங்காநின்ற முதல்வனை அத்தகைய முயற்சி

கள் எத்துணைச் சிறந்தனவா யிருப்பினும் அவை யாங்ஙனஞ் சென்று பற்றும்? மற்று, அன்போ அத்தகைய முயற்சியின் பாற் படுவதின்றிக் காலத்தானும் இடத்தானும் வரையறுக்கப் படாததாய் அழிவின்றி மாறின்றி என்றும் ஒருபடித்தாய் நிறைந்து நிற்கும்வழி அந்நிலையில் தன்னோ டொத்த இறைவனை அது தான் பெற்று இன்புறுதலும் இயற்கையே யாகும். இப்பெற்றித்தாகிய பேரன்பால் விழுங்கப் பெற்றவர் எவ்வகைச் செயலுமின்றி எவ்வகை முயற்சியுமின்றிப் பெருஞ் சோம்பராய்க் கிடப்பினும் அவரே இறைவன்றன் அருட்பெரு விளக்கங்களெல்லாம் எளிதிற் காண்பர் என்பது தெரிப்பார்,

"சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பது சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடம்
சோம்பர் கண்டார்அச் சுருதிக்கட் டூக்கமே."

என்றும்,

"தூங்கிக் கண்டார்சிவ லோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார்சிவ யோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார்சிவ போகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார்நிலை சொல்வ தெவ்வாறே."

என்றுந் தெய்வத் திருமூலரும் அருளிச்செய்தார். ஆகவே தவ முயற்சியில் நின்ற முனிவரர்க்கும் புலனாகாத முதல்வன் அத்தவ முயற்சிக்கும் மேம்பட்ட பேரன்பின் பெருக்கான மாணிக்கவாசகப் பெருமானா லிழுக்கப்பட்டு அவர்க்கு எளிவந்து அருள் புரிந்தது பெரிதும் பொருத்தமே யாமன்றோ? எல்லாம்வல்ல இறைவன் இங்ஙனமாக நான்முகன் முதலான சிறந்த தேவர்களுக்குந் தவமுயற்சியிற் சிறந்த முனிவர்களுக்கும் எட்டாத அருவத் தன்மையனா யிருந்தும், தன்னை அன்பாற் குழைந்து குழைந்துருகும் மெய்யடியார்க்கு மிக எளியனாய உருவுகொண்டு வந்து அருளும் இயல்பினன் என்பதை நம் சமயாசிரியர் மெய்வரலாறுகளில்மட்டுமே ஐயமின்றித் துணியப் பெறுகின்றோம். நம் சமயாசிரியர்களுள்ளுந் திருஞானசம்பந்தப் பெருமானுக்கும் மாணிக்கவாசகப்பெருமானுக்கும் இறைவன் தன் உண்மையுருவில் வந்து அருள் செய்தமையே மிகவும் போற்றற்பால தொன்றாயிருக்கின்றது. உலகியலறிவு நிரம்பப்பெறாத மூன்றாண்டுச் சிறு குழந்தையா யிருந்தபோதே திருஞானசம்பந்தப் பெருமான் இறைவனையும் இறைவியையும் நேரேகண்டு அவர் தம்மால் அருட்பால் ஊட்டப்பெற்று எல்லாம்வல்ல ஞானாசிரிய

ராய்த் திகழ்ந்து தாம் பெற்ற அவ் வருளமிழ்தத்தைச் செந் தமிழ்த் தெய்வப் பாக்களில் நிரப்பி அவை வாயிலாக நம்மனோ ரெல்லாம் அவ்வருளமிழ்தத்தைப் பருகி உய்யச் செய்தன ரன்றோ? அங்ஙனமே மாணிக்கவாசகப் பெருமானுந் தாம் அமைச்சராயிருந்த காலத்தே இறைவனையும் இறைவியையும் நேரேகண்டு அவர் தம்மால் ஆட்கொள்ளப்பட்டனரென்பது,

"கருவாய் உலகினுக்கு அப்புறமாய் இப்புறத்தே
மருவார் மலர்க்குழன் மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயி அந்தணனா யாண்டுகொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ"

"நானுமென் சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் தையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்
வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்
றேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ."

என்று அவர்தாமே அருளிச்செய்த அருமைத் திருப்பாட்டுக்க ளால் இனிது விளங்கா நிற்கின்றது.

இவ்வாறு கடவுளை நேரே கண்டதும், கண்ட அக்காட்சி யினைக் கண்டவர்தாமே தெளித்தெடுத்துச் சொல்லுதலும் நம் ஆசிரியன்மாரிடத்தன்றி மற்றச் சமய குரவர்கள்பாற் சிறிதுங் காண்ட லியலாது. நம் ஆசிரியன்மார் கடவுளை நேரேகண்ட அருங்காட்சிகளே உண்மையானவை. இவ்வாறாகவும் ஆரியர் வழிப்பட்ட பார்ப்பனர்கள் 'கடவுள் அதோ அவருக்கு நேரே வந்து அருள் புரிந்தார். இதோ இவருக்கு நேரேவந்து அருள் புரிந்தார்' என்னும் பொய்யான புராணக் கதைகள் பலவற்றைக் கட்டிவிட்டு அவைதம்மால் நம் சமயாசிரியர் கடவுளைக் கண்ட அருங்காட்சிகளையும் மிக எளியனவாகவுஞ் சிறப்பில்லாதனவாக வும் பலர் கருதும்படி செய்துவிட்டனர்.

என்றாலும், நம்மாசிரியன்மார் கண்ட தெய்வக் காட்சிக்கு அவர்தம் அருட்செம் பாடல்களிலேயே மெய்ச்சான்றுகள் இருத் தல்போலப் புராணக் கதைகளில் கடவுளைக் கண்டவராகச் சொல் லப்படுவோர்தங் காட்சிகளுக்கு மெய்ச்சான்றுகள் சிறிதுமிலை யென்பதை உண்மையாராய்ச்சி செய்தவர்கள் தெளிந்துகொள் ளல் வேண்டும். மாணிக்கவாசகப் பெருமான் எவ்வளவு உறுதியாக எவ்வளவு உண்மையாக இறைவனும் இறைவியுந் தமக்குக் காட்சியளித்ததை மேலைச் செய்யுட்களில் எடுத்துக் காட்டி, எமபோல்வார்க்குங் கடவுளின் எளிவந்த அருட்டன் மையை விளக்கியிருக்கின்றார்கள்!

இனி மாணிக்கவாசகப் பெருமான் கண்ட இத் தெய்வக் காட்சியானது அதனைக் காண்டலில் வேட்கைமீதூர்ந்து விழிப்பாயிருந்த ஏனை எத்திறத்தார்க்கும் எட்டாதாயிற்றென்பதும், அங்ஙனம் விழிப்பாயிருந்தார்க்கு உள்ள முயற்சியுந் தகுதிப்பாடுஞ் சிறிதுமில்லாத தமக்கு அத்தெய்வக்காட்சி தோன்றுவதாயிற்றென்பதும், அவ்வாறு தோன்றிய அத்தெய்வக் காட்சியாற் பிறரெவர்க்குங் காட்டப்படாத அருட்பெரும் புதுமைகளெல்லாம், பிறரெவருங் கேளாத அருமறைப் பொருள்களெல்லாந் தமக்குக் காட்டப்பட்டன, சொல்லப்பட்டன என்பதும்,

"நாட்டார்கள் விழித்திருக்க ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டா
னெம்பெருமான் செய்திட்ட விச்சை தானே."

என்றும்,—

"தூ ...ரற்றொடர்களால் நன்கெடுத்துக் காட்டப்பட்டிருக்
தா
து

(தொடரும்)

அருஞ்சொல் ஆய்தல்

என்
[ஸ்ரீ. மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள் பி. எ., எல். டி.]
மு

கீர்வாணம்

இச்சொல்லின் பொருள் ஒலியம்பு சொல்லம்பு எனலாம். இது தேவபாடை யென்று வழங்கப் பெற்றது. இம்மொழி எம்மொழிக்கும் பொதுவான தென்பர் அதிவீரராமர். அவர் இருந்த காலம் பதினேழாம் நூற்றாண்டின் நடுவென்பர், வில்ஸன் எனும் ஆங்கிலாசிரியர். அரசராக்கிய நூல் நைடதம். வடமொழியில் நைஷத மென்ற நூல் சீ அருஷர் என்பவரால் ஆக்கப்பெற்றது. தமிழ் மொழி பெயர்த்தவர் கொற்கையாளி. சீ அருஷர் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி யென்பர் மக்டானல் என்னும் வடமொழி நூற்சரிதம் வரைந்துள்ளவர். நூற்றாண்டுகள் வேறுபடினும் இரண்டு பெரும் புலவர்களிருந்தன ரென்பதில் ஐயமில்லை. வடமொழியாளராகிய அருஷர் கீர்வாணத்தைச் சிறப்பித்துக் கூறுதலியல்பு. தென்மொழித் துறைபோன அதிவீரராமர் தமிழின் சிறப்புரைத்தல் இயல்பு. ஆனால் நளன் வரலாற்றை வடமொழியினின்று தென்மொழிக்கு மாற்றியவர் தமிழரசராதலின், வடமொழி நூலை

உள்ள வாறே தமிழிலாக்கி யிருத்தல் வேண்டும். புலவர்கட்கு ஒளஷத மென்று வழங்கும் நைடதத்திற் பாண்டிய மன்னர் கூட்டிக் குறைத்துச் சொல்லி யுளரோ வென்பதை வடமொழி நூலையுந் தென்மொழி நூலையும் ஒருங்கே கற்றவர் உறுதி சொல்லக் கூடும். இரண்டு நூலினையு மாராய்ந்தவரே ஏற்றத் தாழ்ச்சியைப் பற்றி உரையாடல் தகும். வடமொழி எழுத்து மட்டும் அறிந்தவர் துணிந்து கூறலியலாது. கூறின் அது தள் ளத்தக்கதாகும்.

தமயந்தி சுயம்வரத்திற்குப் பல தீவுகளிலிருந்தும் நாடு களிலிருந்தும் மன்னர்கள் வந்திருந்தன ரென்றும், அவர் கீர் வாணத்திற் பேசினமையால் அஃது அனைவருக்கும் விளங்கிற் றென்றும் ஷை படலத்தின் ஏழாவது செய்யுள் கூறுகின்றது. அதன் ஈற்றடிகள் இவையாம்.

"பற்பல தேய வேந்தர் தொகுதலின் பாடை தேர்வான்
அற்புட னெவருந் தேவ பாடையி னறைவர் மாதோ."

இதன் உரைகாரர் எழுதுகின்றதாவது:— 'மிக்க அழகினை யுடைய தமயந்தியினது விவாகத்தை விரும்பி அனேக தேசத்து அரசர்கள் கூடியபடியால், தேசங்கள் தோறும் பாஷைகள் வேறுதலின் அவைகளாற் பேசினால் ஒருவர்க் கொருவர் உரைக் கும் வார்த்தைகட்குப் பொருளறியக் கூடாதென்று கீர்வாண பாஷையாற் பேசினு ரென்க' ஆதலாலே அதுவே பாஷைக ளுக்கு மூலமும் எந்தத் தேசங்களுக்கும் பொதுவு மென்பது பெற்றும்.

கீர்வாணம் பிராகிருதமா? முதலி லெழுதப்பட்டதா? இயற்கை மொழியா அல்லது செயற்கை மொழியா? என்று ஆராய்தல் வேண்டும். வடமொழியாகிய சம்ஸ்கிருதத்தை எல்லா மொழியாரும் இன்றும் அறிந்திலரே. அங்ஙனமிருக்க அதைப் பொதுமொழியென்றல் எவ்வாறு பொருந்தும்? அதிற் பேசியதால் எந்நாட்டாரும் பொருள்தெரிந்தன ரென்றால் அது சம்ஸ்கிருதமாயிருத்தல் கூடாது. எம்மொழிக்கும் பொது மொழியென்றால் அது மூலமொழியாயிருத்தல் வேண்டும். அது எது? தமிழா?

வந்திருந்த அரசர்களின் நாடுகள் பின் வருவனவாம். தீவு களில் சான்மலித் தீவு, குசைத் தீவு, கிரவுஞ்சத் தீவு, சாகத் தீவு, புட்கரத் தீவு. நாவலந் தீவினுள்ள நாடுகளின் பெயர்கள் சில கொடுக்கப்பட்டுள. அவையாவன:—அவந்தி, கவுடநாடு,

மத்ரா, (வடமதுரை) கங்கைநாடு, காம்பிலி, வாரணவாசி (காசி தேசம்) கலிங்கம், சிந்துதேசம், குருதேசம், மச்சதேசம், மகதம், குருநாடு, பல்லவதேயம், கேகயம், மத்திரதேயம், வங்கம், அங்கநாடு, பாஞ்சாலம், காந்தாரம், மிதிலை, மாளவம், கோசலம், குடகம், பொன்னிநாடு, கொற்கை ஆகிய இருபத்தைந்து நாடுகளும் ஏனைய நாடுகளுமே. விரிக்கிற் பெருகுமே என்பது பற்றி விடுக்கப்பட்டனவாம். உரையாளர் 'கொற்கையம் பதிக்கு வேந்து' என்பதற்குச் சேரமான் என்று கூறியுளர். அங்ஙனமாயின் பாண்டி நன்னாடு எவண் எங்ஙனம் ஒழிந்ததோ தெரியவில்லை. தமயந்தியின் இன்சொலலைக் கூறுமிடத்துத் 'தமிழினு மினிய தீஞ்சொல் தையல்' என்று வரைந்த தமிழாசிரியர் 'பாண்டி நாடே பழம்பதி' என்று போற்றப் பெற்ற நாட்டை மறக்கக் கூடுமோ? சோழ நாட்டைப் பொன்னி நாடென்று கொடுத்துளரே. கடல் கொள்ளப் பெற்றபின் பாண்டிநாடு என்ற பெயர் மறைந்ததா? சேர நாடும் சோழ நாடு மட்டுமே அதிவீரராமர் காலத்தில், அல்லது ஸ்ரீ அருஷர் காலத்தில் இருந்தனவா? இவ் வையத்தைத் தெளிவிக்குமாறு அன்பர்களை அவாவுவன்.

நாவலந் தீவு

நாவலந் தீவின்கண்ணுள்ள நாடுகள் எவ்வாறு சிறப்பிக்கப் பெற்றுள வென்பது கவனிக்கத் தக்கது. நாவலந் தீவு - தென்கடல்தொட்டு விந்தியமலை யீறாக வுள்ள நாடு தீவகமாயிருந்தது. பின்னர் வடநாடுஞ் சேர்ந்தது.

1. அவந்தி:—

> வள்ளை வாய்க் கமலவாவி வாளையம் பகடு தாவிக்
> கள்ளுலாம் பசிய தாற்றுக் கமுகிளம் பாளை கீறும்
> அள்ளலம் பழனஞ் சூழ்ந்த அவந்தி நாடு............
>
> (தாறு - குலைகள், அள்ளல் - சேறு, பழனம் - கழனி.)

2. கவுட நாடு:—

> செந்நெலங் குலையிற் றூங்குந் தீந்தொடை நறவு காலுங்
> கன்னலங் கழனி சூழ்ந்த கவுட நாடு............
>
> (காலும்- துளிக்கும், கன்னல் - கரும்பு.)

3. மதுரை:—

> வெஞ்சமங் காத்த லன்றி அணியென விளங்கச் செய்த
> இஞ்சிசூழ் மதுரை மூதூர் எதுகுல மன்ன ரேறே.
>
> (இஞ்சி - மதில்.)

4. காம்பிலி:—

நாள்விழா வறாத வீதிக் கனைகுரல் முரசந் துஞ்சாக்
காம்பிலி..............................

5. வாரணவாசி:—(காசி)

வளங்கெழு மருதவேலி வாரணவாசி.

6. சிந்து தேசம்:—

கவட்டடிக் கயவாய் மேதி கன்றுள்ளிப் பொழிந்த தீம்பால்
தெவிட்டவுண் டன்னந் துஞ்சுஞ் செழும்புனற் சிந்து.

(தெவிட்ட - நிறைய.)

7. குருத தேசம்:—

பொருட்டு மென் கமலவாவிப் பூம்புன லுழக்கிக் கொண்டல்
அகட்டினில் வாளை தாவும் அகன்பணைக் குருத.

(கொண்டல் - மேகம், அகடு - வயிறு, பணை - வயல்.)

8. மச்ச நாடு:—

சூலுளைந் தலறிப் பைந்தேன் துளிக்குமென் கமலப் போதின்
வால்வளை முத்த மீனும் வளவயல் மச்ச தேசம்.

(சூலுளைந்து - கர்ப்பவாதைப் பட்டு, அலறி - ஒலித்து,
வால் - வெண்மை.)

9. மகத நாடு:—

முடங்குவெண் தோட்டுக் கைதை முருகுயிர்த் திறங்குந் தெண்ணீர்த்
தடங்கடற் புலவு போக்குந் தண்டுறை மகதநாடு.

(கைதை - தாழை, முருகு - வாசனை, புலவு - புலால் நாற்றம், முடங்கு-வளைவு, உயிர்த்து-வீசி, இரங்கு-சத்திக்கிற.)

10. குரு நாடு:—

மழையக டுரிஞ்சுமாட மலிகுரு நாடு.

(மழை அகடு - மேகத்தின் வயிற்றை, உரிஞ்சு - தேய்த்தல்.)

11. பல்லவ தேயம்:—

வாளை முப்புடைக் காய்த்தெங்கின் படுபழ முதிர்க்குஞ்
சூழற் பல்லவ தேய.

12. கேகய நாடு:—

தண்கார் வரவெதிர் மயில்களாடக் கிள்ளை பாட்டயருஞ்
சோலைக் கேகய நாடு.

13. மத்திர தேயம்:—

மல்லலம் பழனஞ் சூழ்ந்த மத்திர தேயம்.

14. வங்க நாடு:—
பாளைவாய்க் கமுகிற் றூவிப் பலவின்முட் புறக்காய் சிந்த
வாளையம் பகடு தாவும் வங்க நாடு.

15. அங்க நாடு:—
ஆம்பல்வாய் மலரும்வாவி அங்க நாடு.

16. பாஞ்சாலம்:—
கதிர்படு கழனி யூடு களைத்தினம் வண்டுந் தேனும்
புதிதுணக் கமலப் போது புரிமுறுக் கவிழ்ந்து மாறு
மடை திறந்து பாயும் மதுவளங் கொள்பாஞ் சாலம்.

17. காந்தாரம்:—
கோணிலை திரிந்த ஞான்று மழைவளஞ் சுரக்குஞ்
செல்வ மலிந்த காந்தாரம்.

18. மிதிலை:—
முள்ளரை முளரி மேய்ந்து முழுநெறிக் குவளை மென்று
வள்ளைவாய் குதட்டி மேதி வழைநறு நீழற் றுஞ்சும்
வெள்ள நீர்ப் பழனஞ் சூழ்ந்த மிதிலை.

(முள்அரை - முள்நிறைந்த, குதட்டி - மென்று, வழை - புன்னை மரம்.)

19. மாளவம்:—
கதிர்வெயில் கற்றை கான்று காசுகண் படுக்கு மாடம்
மதியக டுஞ்ச வோங்கு மாளவ தேய.

(கான்று - வீசி, காசு - இரத்தினம்.)

20. கோசலம்:—
கடிமுறுக் கவிழ்ந்த செவ்விக் கமலமென் பொகுட்டி லேறிக்
குடவளை முத்த மீனுங் கோசலம்.

(செவ்வி - அழகு, பொகுட்டு - கொட்டை, குடவளை - குடம் போன்ற சங்கு.)

21. குடகம்:—
தாழைமுப் புடைக்காய் வீழ்ந்து தாற்றிளங் கமுகு செற்று
வீழ்சுளை வருக்கை போழ்ந்து வெம்புலி யடிய பைங்காய்க்
கோழரை யரம்பை சாய்க்கும் குடக நாடு............

(முப்புடைக்காய் - மூன்று பக்கங்களையுடைய காய், தாழை -தெங்கு, தாறு - குலைகள், வீழ் - விரும்பப் பட்ட, வருக்கை-பலா, கோழரை-கொழுமையுள்ள அடி, அரம்பை-வாழை.)

22. கலிங்கம்:—
மழலைவண் டுழலத் தூங்கு மழைமதப் புழைக்கை நால்வாய்க்
கழைசுளி களிநல் யானைக் கலிங்க நாடு.........

(மழலை - இனிமை, புழைக்கை-துவாரமுடைய கை, துதிக்கை. நால் வாய் - தொங்கும் வாய், கழைசுளி - கரும்பை முறிக்கும், களி -களிப்பு.)

23. கங்கை நாடு:—
இமிழ்திரை கொழித்த முத்தம் ஏழைநின் முறுவல் காட்டுங்
கமழ்அலம் துறைசூழ் தெண்ணீர்க் கங்கை நாடு.
(முறுவல் - பல்வரிசை, அலம்-அமைவுடைய)

24. பொன்னி நாடு-சோணாடு:—
தேந்துணர் ஊழ்த்த போதுந் தெரிவையர் இழைத்த சிற்றில்
கார்ந்தெரி மணியும் பொன்னுங் காழகில் துணியும் வாரிப்
பூந்திரை சுருட்டுந் தெண்ணீர்ப் பொன்னி நாடு.
(தேம் - வாசனை, துணர் - மகரந்தங்கள், ஊழ்த்த - உதிர்த்த, தெரிவையர் - சிறு பெண்கள், காழ் - வயிரம் பொருந்திய, துணி - துண்டுகள், பொன்னி - காவிரி.)

25. கொற்கை:—
பாட்டளி பேட்டி னோடும் பருமுகை யவிழ்த்துத் தேறல்
கூட்டுணுங் காலவாவிக் கொற்கை.
(அளி - வண்டு, பேடு - பெண், முகை - அரும்பு, தேறல் - தேன், கூட்டுணும் - கொள்ளை கொள்ளும்)

"என்னமற் றினைய வாறே யெரிமணி மாடஞ் சேர்ந்த
மன்னவர் குலமும் பேரும் வரன்முறை வழாது கூறி."

உரைகாரர், வடநூலிற் சொல்லியபடி வெவ்வேறு சொல்லில் இந்நூல் விரியு மென்பது பற்றிச் சுருக்கிக் கூறப்பட்டுள தென்பர். இது மாட்டெறிந் தொழுக லென்னும் உத்தி.

பல நாடுகளைக் கூறிய விடங்களில் தென்னாட்டுச் சிறப்புப் புலவருக்கு நன்கு தெரிந்ததாகத் தோன்றுகின்றது.

"தமிழ்" மொழியின் கடவுட்டன்மை

[திரு. ச. நாகலிங்கம்.]

"தேடிக் கண்டு கொண்டேன், திரு - மாலொடு நான்முகனுந்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே,
தேடிக் கண்டு கொண்டேன்." —அப்பர்தேவாரம்.

இருள்நிற முந்நீர் வளைஇய உருள் வடிவுடையிந் நிலவுலகின்கண் மக்கட் பகுப்பினரால் வழங்கப்பட்டு வரும் மொழிகள்

அளப்பிலவாகும். அவற்றுள் "ஆரியம்" "தமிழ்" என்னு மிரு பெரு மொழிகள் மட்டுமே எல்லாம் வல்ல இறைவனால் மக்கள் உய்யவேண்டி ஆக்கப்பட்டனவென்றும், எனவே அவ் விருமொழிகளுமே இறைமொழிகளென்றும், பிறமொழிகளெல் லாம் சில்வாழ்நாட் பல்பிணியுடை மக்களா லாக்கப்பட்டு நில வும் சிறுமொழிகளென்றும் ஓர் நடுவிகந்த கொள்கை பண்டு தொட்டே இன்றுவரையும் இந்திய இலங்கை நாடுகளில் நிலவி வருகின்றது. இது மொழிகளின் பிறப்பு வளர்ச்சிகளை உய்த் துணரமாட்டாதார் கூற்றேயாம். ஏனெனின், நிலப்பரப்பிலுள்ள ஒவ்வொரு மக்கட் கூட்டத்தினரும் தம்முள்ளக் கருத்தைப் பிற ருணருமாறு விளங்க வெடுத்துரைக்கும் கருவியாகவே ஒவ் வொரு மொழியும் எழுந்ததென்னு முண்மை அகலறிவாளர்க் கெல்லாம் ஒப்ப முடிந்ததாகலின் என்க. இன்னும், இந்நடு வொரீஇய கொள்கை இதையுடையரின் வீக்க தாக்கமாகிய ஓர் பக்கச் சார்பான நிலையை வெளிப்படுத்தும். எப்படியெனிற் காட்டுதும். ஒருவர்பால் விருப்பும் இன்னொருவர்பால் வெறுப்பு மற்ற அன்பே வடிவாகவுடைய எல்லாம் வல்ல எம்மிறைவன் தனது செந்தண்மையைத் துணையாகக்கொண்டு உலகின்கண் வாழும் மக்களுள் ஒரு கூட்டத்தினர்க்கோ அல்லது இருகூட் டத்தினர்க்கோ மொழிகளைத் தானாக ஆக்கிக் கொடுத்தும் பிறர்க்கெல்லாம் அப்படிச் செய்யாது அவர்களையே தாங்களாக ஆக்கிக்கொள்ள விடுத்தும் இவ்விரிநீர் வியனுலகை நடாத்தி வரு கிறானென்றல் அவ்விறைவனது அருள் சுரக்கும் நடுவுநிலைக்கும் "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்னும் அவனருள் வழியெழுந்த பொய்யா மொழிக்கும் இழுக்கை யுண்டாக்கிவிடுத லன்றி இக்கொள்கையுடையாரையும் "தன்னலங்கருதல்" எனும் பெருங் குற்றத்துக்குள்ளாக்கியும் விடும்.

> "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
> கோடாமை சான்றோர்க் கணி." என்பது பொய்யாமொழி.

இவ்வருமருந்தன்ன மொழியை யுரிமையாகவுடைய நாம் ஓர் கொள்கையை உலகில் நிறுவப்புகின் அக்கொள்கையைக் காய் தல் உவத்தலின்றி மக்கட் பகுப்பினரெல்லார்க்கும் பயன்படத் தக்க பரந்த நோக்குடன் நிறுவமுயல்வதே சால்புடைத்தாம். அப்படிச் செய்யத் தவறின் எம்முன்னோரால் எமக்கென வளிக் கப்பட்ட அரும்பெரும் உரிமையை யிழந்தவர்களாவோம். எனவே, உலகின்கண் வழங்கப்படும் மொழிகளில் யாதானு மொன்று கடவுளா லாக்கப்பட்டதென்று கொள்வோமாயின் ஏனையவெல்லா மொழிகளும் அப்படியே ஆக்கப்படவேண்டு

மென்றும், அல்லது ஒருமொழி மக்களா லாக்கப்பட்டதென்று கொள்வோமாயின் அப்படியே ஏனைய மொழிகளும் ஆக்கப்பட வேண்டுமென்றும் எல்லா மக்கட்கும் பொதுவான கொள்கையை நாம் கடைப்பிடித்து நிறுவுவதே சாலப் பொருத்த முடைத்து.

இனி, இந்நிலவுலகின்கண் நின்று நிலவும் மொழிகளுள் ஏதானும் ஒன்ருவது கடவுளா லாக்கப்பட்டதோ என்பதைப் பற்றி ஒரு சிறிது ஆராய்வாம். கடவுளின் திருவருட்டுணையின்றி உலகத்தில் ஒன்றும் நடைபெறமாட்டாதென்னும் உண்மையை அறிவுடையாரெவரும் மறுக்க முன்வரார்.

"அவனன்றி யோரணுவு மசையாது."

"ஒன்றுநீ யல்லை யன்றி யொன்றில்லை."

"அனைத்துலகு
மாக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்
போக்குவா யென்னைப் புரிவிப்பாய் நின்ருெழும்பில்."

என்னும் திருமொழிகள் இவ்வுண்மையை நன்கு வலியுறுத்தும். அப்படி இறைவனருட் டுணைகொண்டு நடப்பவற்றையெல்லாம் கடவுளே செய்கிருரென்றல் உலகமரபு. இது உலகில் நடைபெறும் எச்செயலுக்கு மொக்கும். எனவே, மொழிகளும் இறைவனது திருவருட் டுணைகொண்டு மக்கள்பாற் பிறந்து வளர்ந்து நிலவி வருகின்றனவென்பதும், இதைக்கொண்டு ஒரு மொழி கடவுளா லாக்கப்பட்டதெனக் கொள்வோமாயின் அது எல்லா மொழிகளுக்கு மொக்குமென்பதும், இச் செயற்றன்மையை அடிப்படையாகக்கொண்டு யாதானுமொரு மொழி பிறிதொன்றனின் உயர்ந்தது அல்லது தாழ்ந்தது என்று ஓர் கொள்கையை நிறுவமுடியாதென்பதும் இனிது பெறப்படும்.

இனி, ஒருமொழி பிறிதொரு மொழியினும் மாட்சியுடைத்தென ஆராய்ச்சி வல்லுநர் அம்மொழிகளி னமைந்துள்ள இலக்கண இலக்கியங்களை ஒருபுடை நிறுத்தி ஒப்பிட்டுப் பார்த்தும், சொல்லடிகளை நுணுகி ஆய்ந்தும், ஒலிவடிவு வரிவடிவுகளைக் கூர்த்து நோக்கியும், காலவரையறையை நிறுவமுயன்றும், இன்னும் இன்னோரன்ன பிறவேதுக்களை அடிப்படையாகக்கொண்டும் நாட்ட முயல்கின்றனர். இச்சிறிய கட்டுரையில் நாம் ஆராய எடுத்துக்கொண்ட மொழிகளின் பொதுத்தன்மை "கடவுட்டன்மை"யேயாம். உலகின்கண் வாழும் உயிர்களெல்லாம் ஒரு தனிமுதற் பொருளை ஒருதலையாக ஒப்புக்கொண்டு அம் முழுமுதற் பொருளின் தன்மையை யெய்தி அதனுடன் இரண்

டற ஒன்றுசேரும் சேர்க்கையை அவாவி முயன்று வருகின்றன. அவ்வுயிர்ப் பகுப்புகளுளெல்லாம் மக்கட் பகுப்பே சிறந்ததென்றும், அப்பகுப்பினுள்ள மக்களுள்ளும் இறைவனருள் கைவரப் பெற்றுத் தம்வயமற்று எல்லாம்வல்ல சிவத்தினருள்வயமாயிருந்து உலகினர்க்குப் பயன்பட்டு வாழும் பெரியோரே மிகவுயர்நிலை யுடையரென்றும், அந்நிலையெய்தி மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மைபூண் டொழுகுவோர் சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறாத பரந்த நோக்கினரென்றும் பேரறிவாளரெல்லாம் ஒப்புவர். அங்ஙனமே எம் தமிழ்மொழியும் கடவுட்டன்மையுடைய பரந்த நோக்குடைய பெருமொழி யென்பதை எம்மறிவாற்றலுக் கெட்டிய வளவிற் காட்டுவாம். முதன்முதல் "தமிழ்" என்னும் சொல்லைப்பற்றி ஒருசிறிது ஆராயவேண்டியது இயன்றியமையாதது. இச்சொல்லின் பொருளை ஆராய்வதில் இக்காலத்து அறிஞர் பலர் முன்வந்துள்ளார் என்பது "செந்தமிழ்ச் செல்வி" "தமிழ்ப்பொழில்" முதலிய திங்கள் வெளியீடுகளானும் வேறு ஆராய்ச்சி நூல்களானும் அறியப்படுகின்றது. பல ஆண்டுகட்கு முன்னேயும் இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டு உழைத்துவந்த பல அறிஞர் தங் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால், இவருள் ஒருவரேனும் "தமிழ்" என்னும் சொல்லைப் பிரித்து நேர் பொருள் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஒருசிலர் "இனிமை" "நீர்மை" "சிவம்" முதலிய சிறந்த பொருள் காட்டினாரெனினும் அப்பொருள்கள் என்ன அடியினின்றும் பிறந்தது, ஏற்பட்டதென ஏதுக் காட்டினா ரில்லை. இன்னும் சிலர் "திராவிடம்" "தென்மொழி" எனும் சொற்கள் திரிந்து கால அடைவில் "தமிழ்" எனும் உருத்தாங்கி நிற்பதாக ஒருசிறிதும் பொருத்தமில்லாத வகையில் விளக்கியுள்ளார்கள்.

"கடல் புடைசூழ்ந்த இப்பரவை யுலகின்கண்ணே யிற்றைஞான்றுள்ள ஆராய்ச்சி பலவற்றுள்ளும் மொழியாராய்ச்சி செய்தல் தலைசிறந்த தொன்றாக நிற்றலின், பலவாண்டுகளாகத் தமிழ் முதலிய மொழியாராய்ச்சி செய்தலையே மேற்கொண்டு முயன்ற திறத்தினானே சொல்லெல்லாம் காரணச்சொல் என்பது திண்ணமாயிற்று" எனவும்,

"அனைத்துச் சொற்களுக்குங் காரண முதலியன கூறத் துணிந்தனன்." எனவும்,

"இனி, இடுகுறிப்பெய ரொன்றேனும் இன்றாம்." எனவும்,

"தொல்காப்பியர்க்கும் இடுகுறிப் பெயரில்லை யென்பதே துணிபு." எனவும்,

"பவணந்திமுனிவர் மாத்திரம் வடமொழியார் மதம்பற்றி இடுகுறிப்பெயர் உடன்படுவாராயினர்." எனவும், கூறிய

மாகறல் கார்த்திகேய முதலியா ராகுதல்,

"எந்தமிழ்மொழியின் சொற்பரப்பை இனிது ஆராயுமிடத்து, ஒலிக்குறிப்புகளாயுள்ள சரசர, கறகற என்றற்றொடக்கமான ஒரு கைம்மண்ணளவு சொற்களை ஒழித்து, ஒழிந்த உலகளவானவையெல்லாம் காரணப் பெயர்ட்டா யுள்ளவைகளே என்பது தேற்றமாகும்." எனவும்,

"ஆகவே, நன்னூலுடையார் ஆதியோர்கூறிய 'இடுகுறி'ப் பெயர்கள் ஆதியிலுள்ளனவல்ல; அனைத்தும் காரணப் பெயரேயாய் எழுந்து, பிற்பட்ட காலத்தில் காரணம் தெரிக்கலாற்றாமற் கிடந்தனவே இடுகுறிப் பெயராயின என்க." எனவும் கூறிய **சுவாமி ஞானப்பிரகாச** ராகுதல், எம்மொழியின்கண் வழங்கும் பல சொற்களை எடுத்து அவற்றின் காரணத்தை ஆராய்ந்து வெளியிட்டாரேனும், எமது மொழியின் பெயராகிய "தமிழ்" என்னும் சொல்லையும் ஆராய்ந்து தம் கூற்றை வலியுறுத்தாது விட்டமை வியப்பினும் வியப்பே.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே." என்பது ஒல்காப் பெரும் புகழ்த் **தொல்காப்பியனார்** கூற்று. எனவே, சொற்களெல்லாம் காரணப் பெயரென்பது பெறப்படுகின்றது. ஆனால், அக்காரணப் பொருள் எளிதிற் காண்டற்பாலதன்றென்பது "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா." என்னும் பிறிதொரு சூத்திரத்தினாற் பெறப்படும். இச்சூத்திரங்களை யடிப்படையாகக் கொண்டே நாம் "தமிழ்" என்னும் சொல்லையும் ஆராயவேண்டும். ஏனெனின், சாதனையில்லாப் போதனை பயன்படாதாகலினென்க. தமிழ் மாது தன்னிற் றோன்றிய மக்களாகிய சொற்களனைத்துக்கும் ஓர் கட்டுப்பாடமைக்கப்புகின் தானும் அக் கட்டுப்பாட்டுக்குளமைந்து நடந்து காட்டுவதே முறையாகும். இதுவே உலகின்கண் அறிவுடை மக்களால் பரந்த நோக்குடைய நீதியெனப்படும். **அர**சன் பிழை செய்வதில்லை (The king can do no wrong) என்னும் தற்கால அரசியல் முறையிலும் ஒருகுலத்துக் கொரு நீதி புகட்டிவரும் மனுவாதி அறநூற்களிலும் பயின்று வருபவர்களுக்கு இவ்வுண்மை புலப்பட லரிதெனினும், கன்றையிழந்து வருந்தி முறையிட்ட ஆவின் குறை தீர்ப்பான் வேண்டி அவ்வாவின் கன்றையும் தன் கண்ணனைய தனிமகனையும் ஒப்ப நோக்கி,

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சு சுடத் தான்றன்
அரும் பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்"

ஆகிய மனுநீதிகண்ட சோழன் செயலையும், கண்ணகியின் வழக்கைக் கேட்டவுடன்

"மணிகண்டு
தாழ்ந்த குடையன் றளர்ந்த செங்கோலன்
பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவ
லென்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுளென"

மயங்கி வீழ்ந்த மன்னவன் தென்னவனின் செயலையும் எடுத்துக் காட்டாக வுள்ள எம்முன்னோரின் அரசியல் முறையையும்,

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்"

என்னும் பொதுவிதியைத் தன்னகத் தடக்கியிருக்கும் வள்ளுவர் செய் திருக்குறளையும் மறுவற நன்குணர வல்லார்க் கெல்லாம் இவ்வுண்மை இனிது புலப்படும் என்க.

இனி, "தமிழ்" எனும் சொல் தம் + இழ் என்னுமிரு கூறுகளாகப் பிரிக்கப்படும். இவற்றுள் 'தம்' என்பது 'தமது' என்று பொருள்படும். "இழ்" என்பது "இல்" எனும் பொருள்படும்: இவ் "இழ்" எனுமடி "இல்" எனுமடியுடன் பொருந்துமெனவும் அவ்வடியின் பொருள் "கீழுறுந் தன்மை" எனவும் சுவாமி ஞானப்பிரகாசர் சிலநாட்களுக்கு முன் தாமெழுதிய "தமிழ் அமைப்புற்ற வரலாறு" என்னும் நூலில் ஓர் இனக்கூட்டமாகிய பல சொற்களின் பொருளை யாராய்ந்து வெளியிட்டுள்ளார். அதன் விரிவை ஆண்டுக் கண்டு கொள்க. எனவே "தமிழ்மொழி" என்னும் சொற்றொடரைப் பிரிக்கின் அது தம் + இழ் + மொழி = தம் + இல் + மொழி எனப் பகுக்கப்பட்டு "மக்கள் தமதில்லாதவற்றை மொழிதல்" என்னும் பொருள் கொடுத்து நிற்கும். இக்காலத்துத் தமிழ்மக்கள் நிலையைத் துருவி ஆராயின் அவர்கள் தமக்கென ஒன்றுமில்லாதவர்களாகவே காணப்படுகின்றார்கள். ஊண் உடை வாணிகம் முதலிய எவற்றிற்கும் பிறரையே நம்பி உயிர் வாழ்ந்து வருகின்றார்கள். கல்வி முறையிலும் பிறமொழி

களில் புலமையுடைமையையே அவாவி நிற்கின்றனர். கடவுள் வழிபாடுகூட பிறமொழியி னுதவியின்றி நடைபெற இயலாத நனி இரங்கற்பாலதாகிய நிலையிலிருக்கின்றார்கள். எனவே இந் நிலையிலிருக்கும் மக்கட்கும் அவரான் பயிலப்பட்டு வரும் மொழிக்கும் கால நிலைக்கேற்ற “தமிழர்” “தமிழ்” எனும் பெயர்கள் வாய்த்தமை மிகவும் பொருத்தமுடைத்தே.

இனி, பன்னூறாண்டுகட்கு முன்னே வியற்றப்பட்டு இன்னும் முழு மாணிக்கங்களாக மிளிரும் எமது மொழியிலுள்ள பழைய நூல்களை ஒரு சிறிது பயின்றார்க்கும் ஒருகாலத்திலே தமிழ்மக்கள் மிகவும் உயர்ந்த நிலையிலிருந்தார்க ளென்னு முண்மை தெற்றென விளங்காநிற்கும். அப்படியிருந்த காலத்தில் அவர்கட்கும் அவர்கள் மொழிக்கும் அந்நிலைக்கேற்ற காரணப்பெயர் இருந்ததாகத் தெரிகிறது. எப்படியெனிற் காட்டுதும். திராவிட மொழிகளின் இலக்கண வமைதிகளை நன்கு ஒப்பிட்டாராய்ந்து அவ்வாராய்ச்சியின் பயனாக ஆங்கில மகனார் Dr. Caldwell என்பவர் “Comparative Grammar of the Dravidian Languages” எனுமோர் விரிவான நூலியற்றியுள்ளார். அப்பெரியார் அந்நூலின்கண் பின்வருமாறு “தமிழ்” என்னும் மொழிப் பெயரைப்பற்றி வரைந்திருக்கின்றார் :—“The proper spelling of the term Tamil is Tamir, but through the change of r into ? it is often pronounced Tamil, and is often (though erroneously) written *Tamul* by Europeans. Tamul is the mode of writing the name which appears to have been introduced by the French.” இதினின்றும் ஐரோப்பியர் எமது நாட்டில் முதன் முதல் நுழைந்த காலத்தில் எமது மொழி ‘தமுள்’ என்றழைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று நினைக்க இடமிருக்கின்றது. காலடுவெலர் (caldwell) இது ஐரோப்பியர் தப்பாகக்கொண்ட முறையென ஒதுக்கியுள்ளா ரெனினும் எமக்கு இதுவே எமது மொழியின் உண்மையான பெயரென்பது புலப்படுகின்றது. ஏனெனின், “தமுள்மொழி” என்னும் சொற்றொடரைப் பிரித்துப் பார்க்கின் அது தம் + உள் + மொழி என்றாய் “மக்கள் தம்முள்ளக் கருத்தினைப் பிறருணருமாறு மொழிதல்” என்னும் விழுமிய பொருள் கொண்டிருப்பது காணப்படும். ஆங்கிலமொழியிலும் “Language is the expression of one's thoughts to others.” என்னுமோர் கூற்று வழங்கப்பட்டு வருகிறது. எனவே ‘தமுள்’ எனும் பெயர் “மொழி என்பது யாது?” (what is a language?) எனும் கேள்விக்குச் சிறந்த விடையிறுக்கு மாற்றல் வாய்ந்ததொன் றென்பதைக் கண்டுகொள்க.

உலகின்கண் பயிலப்பட்டு வரும் ஒவ்வொரு மொழியும் மக்கள் தம்முள்ளக் கருத்தைப் பிறருணருமாறு எடுத்து விளக்க எழுந்த கருவியாயுள்ளதென்பது எல்லா மொழியினர்க்கும் எஞ்ஞான்றும் உடன்பாடாதலின், இவ்விழுமிய கருத்தைத் தன்னுளடக்கி வைத்திருக்கும் "தமுள்மொழி" என்ற சொற்றொடரால் உலகின்கண் வழங்கிவரும் எம்மொழியையும் அழைக்கலாம். எடுத்துக்காட்டாக ஆங்கிலர் தமுள் மொழியே ஆங்கிலமாகும், யப்பானியர் தமுள்மொழியே அம்மக்களால் வழங்கப்படும் யப்பானிய மொழியாகும். இப்படியே பிறமொழிகளுக்கும் அமைத்துக்காண்க. எனவே, இப்பெயரீடு உலகில் வழங்கும் எம்மொழிக்கும் பொதுவாகவும் தமிழ்மக்களால் வழங்கப்பட்டு வரும் மொழிக்குச் சிறப்பாகவும் பயன்பட்டு விளங்கும் ஆற்றல் வாய்ந் துள்ளதென்பது இக்கருத்தைக் காய்தல் உவத்தலின்றி உய்த்துணர வல்லார்க்கெல்லாம் இனிது புலப்படும் என்க.

"யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகியாங்கே
மாதொரு பாகனார் தாம்வருவர் மற்றத் தெய்வங்கள்
வேதனைப் படுமிறக்கும் பிறக்குமேல் வினையுஞ்செய்யு
மாதலா லிவையிலாதா னறிந்தருள் செய்வனன்றே"

அருளாளர் கூற்று எல்லாம் வல்லசிவமே முழுமுதற் கடவுளென்பதையும் அம்முழுமுதற் கடவுளை எவ்வெவர் தம்மறிவாற்றலுக்கேற்ப எப்பெயரானழைத்து அன்புடன் வழிபடினும் "அன்பு" என்னும் பெயரின் பொருளையும் வடிவையும் தன்னுட் புதைந்து வைத்திருக்கும் சிவமே அவரவர்கெல்லாம் வேண்டினர் வேண்டியாங்கெய்தி யின்புற அருள்சுரந்து நிற்குமென்பதையும் நன்கு விளக்கும். "அன்பு" எனும் விழுமிய பொருளை அறிவுறுத்தி அவ்வன்பினுட் டிளைக்கச் செய்யவல்ல "சிவம்" எனும் பெயரானே எல்லாம் வல்ல முழுமுதற் பொருளை அழைக்கவும் அப்பெயரானே பூசிக்கவும் உண்மையறிவு வாய்க்கப் பெற்றவரெவரும் அவர் எச்சமயத்தாராயினும் ஒருபோதும் பின்னிற்கமாட்டாரென்பது எமது துணிபு. ஏனெனின், "அன்பு" என்னும் கடவுட்டன்மை எச்சமயத்தவருக்கும் எனைத்தானும எஞ்ஞான்றும் உடன்பாடாதலினென்க.

(தொடரும்)

தமிழ் இலக்கியம்
TAMIL LITERATURE

[திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள், M. A., B. L.]

வெற்றி வேற்கை

(௭௧ - ம் பக்கத் தொடர்ச்சி)

19. பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்
உற்றோ ரெல்லா முறவின ரல்லர்
கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்.

All that are born are not children ;
All one's kindred are not really kin ;
All that are married are not really wives.

20. அடினு மாவின்பா றன்சுவை குன்றாது
சுடினுஞ் செம்பொன் றன்னொளி கெடாது
அரைக்கினுஞ் சந்தனந் தன்மண மறாது
புகைக்கினுங் காரகில் பொல்லாங்கு கமழாது
கலக்கினுந் தண்கடல் சேறா காது

However much
Heated and boiled, cow's milk will not lose in sweetness ;
Heated and burnt, gold will not lose its lustre ;
Rubbed and reduced in size, sandal-wood will not lose its fragrance.
Burnt and smoked, the Akil will not smell bad.
Stirred and disturbed, the ocean will not get muddy.

21. அடினும் பால்பெய்து கைப்பறாது பேய்ச்சுரைக்காய்
ஊட்டினும் பல்விரை உள்ளி கமழாது.

The wild gourd even boiled in milk loses not its bitterness. Mixed with many fragrant seeds the gallic will not lose its odour.

22. ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

The friendship of the wise and the great, of however short a duration shall be firmly rooted and reach unto the centre of the earth.

23. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

Centuries of friendship with the wicked shall be as the floating moss without root or stability.

24. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.

Honour and shame are of our making.

25. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.

The trivial faults of the low it behoves the wise to condone.

26. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயிற்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.

Should the low however err egregiously, it will be hard for the wise ones to forgive.

27. கற்கை நன்றே கற்கை நன்றே.

To learn is desirable, most desirable.

28. பிச்சை புகினும் கற்கை நன்றே.

Even a beggar should manage to learn.

29. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.

The illiterate person who makes a vain boast of birth is mere chaff.

30. நாற்பாற் குலத்தில் மேற்பா லொருவன்
கற்றில னாயிற் கீழிருப் பவனே.

Even the man of the highest caste of four if illiterate is lowest of the low.

31. எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருக வென்பர்.

The learned man who-so-ever he be and from what-so-ever community he hails, is most welcome.

32. அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்

Even Kings respect wise men.

33. அச்ச முள்ளடக்கி யறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி
யெச்சமற் றேமாந் திருக்கை நன்றே.

Far better that a family becomes extinct, than that it is continued by wretches who fear not God and have not common sense.

34. யானைக் கில்லை தானமும் தருமமும்.

Though it has a long trunk (hand) the elephant is not known to give gifts.

35. பூனைக் கில்லை தவமும் தயையும்.

Though it closes its eyes, the cat is not known to practise penances or show benevolence to any.

36. ஞானிக் கில்லை யின்பமும் துன்பமும்.

The wise man hath done with pleasure and pain.

37. சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்.

What knows the white ant of wealth or pride ?

38. முதலைக் கில்லை நீத்தும் நிலையும்.

The crocodile is not worried about the water being deep or shallow.

39. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.

Fools neither fear nor are ashamed.

40. நாளுங் கிழமையு நலிந்தோர்க் கில்லை.

Auspicious and fasting days are not for the weak, and the infirm.

41. கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை.

The fallen have neither friends nor kinsmen.

42. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

Poverty and prosperity abide not for ever.

43. குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினு நண்ணுவர்.

Kings on elephants with white silk umbrellas, may (by a reverse of fortune wearied with walking seek shelter in the nearest city.

44. சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினு மடைவர்.

Men great and wealthy and honoured might losing these seek shelter in a house of charity.

45. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்தர சாளினு மாளுவர்.

Beggars begging hoarse for food might one day sit with Kings and rule.

46. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினு மழிவர்.

Many a Croesus with wealth-heaped mountain-high might lose it all and perish that very day.

47. எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பா ழாகினு மாகும்.

Even the seven-storied palace may topple and crumble and become the grazing ground for asses.

48. மணவணி யணிந்த மகளி ராங்கே
பிணவணி யணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்த வாடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.

Brides may get widowed and clasping the the corpses of their husbands find the bridal dress turn to widows' weeds, dishevel their plaited hair and weep their miserable state.

49. பெற்றமுங் கழுதையு மேய்ந்த வப்பாழ்
பொற்றொடி மகளிரு மைந்தருஞ் செறிந்து
நெற்பொலி நெடுநக ராயினு மாகும்.

The wilderness where the ox and the wild ass' grazed may grow into a great and lovely city rich in granaries and full of lovely men and women wearing ornaments of gold.

50. இல்லோ ரிரப்பது மியல்பே யியல்பே.

It is natural, most natural for those in want to beg.

51. இரந்தோர்க் கீவது முடையோர் கடனே.

It's the giver's virtue to give to one who lacks a thing.

52. நல்ல ஞாலமும் வானமும் பெறினும்
எல்லா மில்லை யில்லில் லோர்க்கே.

Earth and heaven are no sweet possession to one who is unmarried.

53. தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.

The big bold elephant still fears the small knotted bamboo stick.

(தொடரும்)

கருவூர்த் தேவர்

[திரு. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள்]

(௱௮-ம் பக்கத் தொடர்ச்சி)

"செங்கணு போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள்வீற் றிருந்த
வங்கணு போற்றி யமரனே போற்றி
யமரர்கள் தலைவனே போற்றி
தங்கணுன் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கணு யகனே போற்றிஎ ழிருக்கை
யிறைவனே போற்றியே போற்றி" (௮)

"சித்தனே யருளாய் செங்கணு வருளாய்
சிவபுர நகருள்வீற் றிருந்த
வத்தனே யருளாய் அமரனே யருளாய்
அமரர்க ளதிபதி யருளாய்
தத்துநீர்ப் படுகர்த் தண்டலை சூழற்
சாட்டியக் குடியுளே ழிருக்கை
முத்தனே யருளாய் முதல்வனே யருளாய்
முன்னவா துயர்கெடுத் தெனக்கே" (௯)

இப்பாட்டுக்களைக் கவனிக்கும்போது அவற்றின் அழகும் இயல்பாக நெகிழ்ந்து செல்லும் அமைப்பும் பிற சிறப்புக்களும் நம்மனத்தைக் கொள்ளை கொள்ளாமற் போகா. இவ்வாறே ஏனைத் திருப்பாட்டுக்கள் பலவற்றுள்ளுங் காணலாம்.

இறைவன் காட்டவே நாம் காண்போமன்றி அவன் காட்டாக்கால் நாம் ஒன்றும் காணும் ஆற்றலில்லோம்.

"உணர்த்த உணர்தலின்" என்பது ஆன்ம விலக்கணமன்றோ ?

"காட்டுவித்தா லாரொருவர் காணு தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே"

என இக்கருத்தை வலியுறுத்தி யருளினூர் வாகீசப் பெருந்தகை. எனவே நாம் இறைவனை நோக்கிப் "பெருமானே, எங்களுக்கு எங்களது சிறிய தன்மையினைக் காட்டி உனது பெருந்தன்மையையும், உனது அருட்டிறங்களையும் காட்டுக" என வேண்டுவோம். அவன் காட்டக் கண்டபோது அவனிடத்து

அன்பு உண்டாகி அவனையே துதிப்போம். துதித்துட துயர்கெடுத் தருளுமாறு வேண்டுவோம். வேண்டினால வாறே யருளி முத்தி கொடுப்பான். முன் அறியாதிருந்த இறைவனது தன்மைகளை அவன் காட்டியருளக் கண்டு அவனே இறையாதலை யுணர்ந்து அவனை வேண்டிக்கொண்டு மெய்ப் பயன்பெறுவோம் என்ற அம்முறையே இப்பாட்டுக்கள் அமைந் துள்ளன.

> " என்னை யேது மறிந்தில னெம்பிரான்
> றன்னை நானுமுன் னேது மறிந்திலன்
> என்னைத் தன்னடி யானென் றறிதலும்
> பின்னை நானும் பிரானென் றறிந்ததே "
>
> (வாகீசர் தனித்திருக்குறுந்தொகை—அ)

> " தன்னிற் றன்னை யறியுந் தலைமகன்
> தன்னிற் றன்னை யறியிற் றலைப்படும்
> தன்னிற் றன்னை யறிவில னாயிடின்
> தன்னிற் றன்னையுஞ் சார்தற் கரியனே "
>
> (வாகீசர் சித்தத்தொகை—உக)

> மங்கை பங்க கங்கை நாயகநின்
> தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
> மாயப் படலங் கீறித் தூய
> ஞான நாட்டம் பெற்றபின் யானு
> நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலு
> மென்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
> நின்னிலை யனைத்தையுங் கண்டே னென்னே
> நின்னைக் காணு மாந்தர்
> தன்னையுங் காணுத் தன்மை யோரே "
>
> (பட்டினத்துப்பிள்ளையார் திருவிடை - மும்—கரு)

என்பனவாதி பெரியோர் திருவாக்குகளின் கருத்துக்களும் இங்கே உய்த்துணர் தற்பாலனவாம்.

முன்னோர் மொழிபொருள் போற்றல். இனித்தேவர் திருவாக்குகளிலே முன் னிருந்த பெரியார்க ளருளிய திருக்குறள் தேவாரம் திருவாசக மாதிய திருவாக்குக் களின் சொல்லும் பொருளும் அங்கங்கே அழகுபெற வைத் தாளப் பெற்றிருக்கும் அமைதியின் சிறப்பு நோக்கற்பால தொன்றும்.

"துனிபடு கலவி மலைமக ளுடனாய்" (திருவிடை—ரு)

இத்தொடரிலே

குறள். "துனியும் புலவியும் இல்லாயிற் காமம்
கனியும் கருக்காயு மற்று" (குறள், புலவி—௬.)

என்ற திருக்குறட் கருத்துப் பொலிவுறுதல் காணலாம்.

"விண்ணோர்
திருவாசகம். பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க வென்னை யாண்டாய்க்கு"
(திருச்சதகம்—உக)

என்பது திருவாசகம்.

இக்கருத்து களந்தை ஆதித்தேச்சரம் (எ) வது.

"திக்கடா நினைந்து நெஞ்சிடிந் துருகுந்
திறத்தவர் புறத்திருந் தலச
மைக்கடா வனைய வென்னையாள் விரும்பி
மற்றொரு பிறவியிற் பிறந்து
பொய்க்கடா வண்ணங் காத்தெனக் கருளே
புரியவும் வல்லரே"

என்ற திருப்பாட்டிலே விளங்குதல் காணலாம். இன்னும்,

"கடுவினை பாசக் கடல்கடந் தைவர்
கள்ளரை மெள்ளவே துரந்துன்
அடியிணை யிரண்டும் அடையுமா றடைந்தேன்
அருள்செய்வாய் அருள்செயா தொழிவாய்"
(திருப்பூவணம்—ரு)

"நெற்றியிற் கண்ணென் கண்ணினின் றகலா
நெஞ்சினி லஞ்சிலம் பலைக்கும்
பொற்றிரு வடியென் குடிமுழு தாளப்
புகுந்தன போந்தன வில்லை
மற்றெனக் குறவேன்........................."
(தஞ்சை........இராச, உ.)

என்ற திருப்பாட்டுக்களிலே முறையே

"................எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ விதற்கு நாயகமே" (குழைத்தபத்து, எ)

"........................ஊத்தையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே" (பிடித்தபத்து, க)

என்ற திருவாசகங்களின் கருத்துப் பொலிவுறுதல் காணத் தக்கது.

தேவாரம்.

"அத்தாவுன் னடியேனை யன்பா லார்த்தாய்
அருணோக்கிற் றீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்
எத்தனையு மரியைநீ யெளியை யானாய்
எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையும் எம்பரமோ வைய வையோ
எம்பெருமான் றிருக்கருணை யிருந்த வாறே."
(வாகீசர் தனித்திருத்தாண்டகம், அ)

என்ற தேவாரத் திருவாக்கின் கருத்து

" அன்னமாய் விசும்பு பறந்தயன் றேட
வங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி யென்மனம் புகுந்த
எளிமையை யென்றும்நான் மறக்கேன்"
(கங்கை கொண்ட......௧)

"செம்மனக் கிழவோ ரன்புதா வென்றுன்
சேவடி பார்த்திருந் தலச
வெம்மனங் குடிகொண் டிருப்பதற் கியானு
றென்னுடை யடிமைதான் யாதே" (திருப்பூவணம்—௬)

"பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
பதம்பல ரேம்பலித் திருக்க
வென்னெடுங் கோயி னெஞ்சு வீற்றிருந்த
வெளிமையை யென்றுநான் மறக்கேன்"
(தஞ்சையிராச—அ)

"....................பாவியேன் செய்யும்
பிழையெலாம் பொறுத்தென் பிணிபொறுத் தருளாப் பிச்சரே"
(களந்தையாதித்—௪)

என்ற இத்திருவிசைப்பாக்களிலே பொலியக் காணலாம்.

"....................கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்"

என்பது வாகீச முனிவருடைய திருவாக்கு. இதன் சொல்லும் பொருளும் தேவர் திருவாக்கிலே

"கண்ணினுண் மணியிற் கலந்தனை" (கங்கை—௯)

"கண்ணியன் மணியின் குழல்புக் கங்கே
கலந்துபுக் கொடுங்கி னேன்" (பூவணம்—௪)

"கண்ணிற் கண்மணி யனையான்" (திருவிடை, ௬)

என்ற திருவிசைப்பாக்களிலே விளங்குதல் குறிக்கத்தக்க தொன்றாம்.

"தோடுடைய செவியன்" என்று திருஞானசம்பந்த சுவாமிகள் தமது தமிழ்மறைத் திருவாக்கைத் தொடங்கித் தோட்டினைச் சிறப்பித் தருளினார்.

"தம்பாடல் பரமற்பாற் செல்லு முறைபெறுவதற்குத்
திருச்செவியைச் சிறப்பித்தருளினார்"

என்று அதற்கு அமைதிகாட்டி யருளினார் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள். எனவே எம்பெருமான் திருச்செவியும் அதில் விளங்கும் தோடும் அடியார்களின் உள்ளத்தே ஆசை விளைத்துக் கொள்ளை கொள்வனவாயின.

இக்கருத்து

"பாவியேன் காதல்செய் காதில் ஐய செம்பொற்றோடு"
(திருவிடை—௧)

என்ற தேவர் திருவாக்கிலே பொலிந்து விளங்குவ தொன்றாகும்.

சித்தாந்த சாத்திர உண்மைகள். கடவுள் உயிர் உலகம் என்ற முப்பொருள்களையும் முறையே தெரித்து உலகத்தைவிட்டு உயிர் கடவுளை அடையும் நெறிகளை முறையே கூறி விதிக்கும் சிவாகமாதி சைவ சித்தாந்த சாத்திரங்களையும் அவற்றால் விளக்கப்பெறும் பல உண்மைகளையும் தேவர் அருமையாக ஆங்காங்கே குறித்தருளுகின்றார்.

"பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவற்
படிவழி சென்றுசென் றேறிச்
சிந்தையுந் தானுங் கலந்ததோர் கலவி
தெரியினுந் தெரிவுறா வண்ண
மெந்தையுந் தாயும் யானுமென் றிங்ஙன்
எண்ணில்பல் லூழிக ளுடனாய்
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே" (௫)

இதிலே சைவசித்தாந்த சாத்திரங்களைப் "பந்தமும் வீடும் தெரிபொருட் பனுவல்" என அருமையாகச் சுட்டியிருத்தல் பாராட்டற் பாலதாம்.

"சிந்தையுந் தானும் கலந்ததோர் கலவி
தெரியினுந் தெரிவுறா வண்ணம்"

என்பதனால் இறைவன் உயிர்க்குயிராய் அங்கங்கே கலந்து அத்துவிதமாய் நிற்கின்ற நிலையின் பெருமை விளங்கப் பெற்றதாம்.

"உரைச்சேரு மெண்பத்து நான்குநூ றுயிரமாம் யோனி பேதம்
நிரைச்சேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான்"

என்ற திருஞானசம்பந்த சுவாமிகளின் திருவாக்கின் கருத்தும் இங்கே புலப்படுதல் காணலாம். இறைவனது எங்கும் நிறைந்த தன்மையும், எல்லாம்வல்ல தன்மையும் விளக்கப் பெற்றனவாம்.

"அணுகாது நுணுகியுள் கலந்தோன்"

என்னும்போது

"...............நுணுகாது நுண்ணியான்
யாது மணுகா தணுகியான்"

என்ற திருக்கைலாய ஞானவுலாத் திருவாக்கு நினைவுக்கு வருகின்றது. **கலந்தோன்** என்பதால் இறைவன் யாவற்றிலும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் பதி நிலை தெரிக்கப் பெற்றதாகும்.

இதனையே பின்னும் தேவர்,

"அணியுமிழ்சோதி அணியினுள் கலந்தாங்கு" (திருவிடை—௪)
"கண்ணினுண் மணியிற் கலந்தனை" (கங்கை—க)

என்பனவாதி பல திருவாக்குகளால் வற்புறுத்தியருளியிருக்கின்றார்.

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போன்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்"

என்ற வாகீசர் திருவாக்கின் பொலிவை இங்கே ஞாபகப்படுத்தி ஒப்பு நோக்கின் மிகச் சுவை பயப்பதாகும். சைவசித்தாந்த நெறியானது எல்லாக்கொள்கைகளையும் தன்னுள் அடக்கி அவ்வவற்றிற்குப் படிமுறை காட்டி நிற்ப தொன்றாகும். அதன் தத்துவ சோபானத்திலே உயிர்கள் படிப்படி ஏறிச் சென்றவாறே இறைவனை அம்முறையேசற்பித்துச் சமீபித்து இறுதியில் அவனோடு இரண்டற்ற தன்மையிலே கலக்கின்றன என்பது முடிபு. இதனை

"பனுவற்படி வழிசென்று சென்றேறிச்
சிந்தையுந் தானும் கலந்ததோர் கலவி"

என்பதனால் விளக்கி யருளினார். (தொடரும்)

தாய்மொழிக்கு அன்பர்கள் செய்யவேண்டிய முறைமை

[திரு. செல்லூர். செ. ரே. இராமசாமி பிள்ளை]

உலகிடைப் பிறந்த மக்கட்கு அவ்வவர் பிறந்த நாட்டின் பயிலப்பெறும் மொழியே தாய்மொழியாகும். அவ்வாறே நமக்குத் தாய்மொழி தமிழ் மொழியே. இம்மொழி முற்காலத் தில் மதுரைநகரில் முதலிடை கடையென்னும் முச்சங்கங்களின் சார்பில் அழகுபெறச் செழுமையுடன் வளர்ந்து உலக மக்கள் பல நலனும் பெற்று இன்புறுமாறு செய்தது. இக்காலத்தில் தமிழ் மொழி, போற்றுவா ரின்மையால் கொழுகொம் பில்லாக் கொடி போல் தயங்கி நலிவுறுகின்றது. அதனை யொழிக்க முன்வருவாரே தமிழ் மக்களாவர்.

முதன்மையாகத் தமிழ் மக்கள் செய்ய வேண்டுங் கடமை களைச் சிறியேன் சிற்றறிவுக் கெட்டியவரையில் இதன் கீழ்ப் பொறிக்கின்றேன்.

(க) நமது சீரிய தமிழ்மொழிக் குற்ற இடுக்கண் தீரு மாறு தமிழ் மொழியிற் பிறசொற் கலவாது தனித்தமிழாகவே வழங்குமாறு செய்தல்வேண்டும். தமிழ் மொழியிலேயே யெல்லாச்சொற்களும் நிரம்பிக்கிடத்தலால் அதனை வழக்கிற்குக் கொண்டுவருமாறு கல்லூரிகளினும் பேச்சுவழக்கிலுஞ் செய்தல் வேண்டும்.

(உ) ஒலியிலக்கணவல்லுநரான திரு. பா. வே. மாணிக்க நாயகரவர்கள் போன்ற பேரறிவாளர்கள் மேனாட்டு நிலநூல் முதலிய நூல்களையும் மொழி பெயர்த்தலோடு அந்நாட்டுச் சொற்கள் பல தமிழ்மொழியிற் கலந்து தமிழோ ஆங்கிலமோ என்னும் உருவமே தெரியாது வழங்கப்பெறுவதால் அவ்வம் மொழிகளுக்குத் தக்க பொருள்சான்ற சொற்களை மொழி பெயர்த்துதவ வேண்டும்.

(ங) திரு. மறைமலையடிகள் போன்ற தமிழ்ப் பெருமக் கள், பல தமிழ்நூல்களுக்குப் பழையவுரைக ளிருப்பினும் சிற் சில இக்கால நிலைக்குப் பொருந்தாதிருப்பதால், இவ்வுரைகளை நீக்கிப் புத்துரை செய்தல்வேண்டும். அடிகள் இதுவரை நந்தாய் மொழிக்குச் செய்த தொண்டு எண்ணிறந்தன. அடிகளே நந்நாட்டிற்குத் தமிழுணர்ச்சியை யெழுப்பியவர்கள். இன்னும் இதுபோன்ற அருந்தொண்டு அடிகள் செய்து வந்தால் தமிழ்

மகள் புத்துடம்பு பெற்று இனிமையோடு செழித்தோங்கு வார்.

(௪) ஒவ்வொரு செல்வமிக்க தமிழ்மக்களும் கோவில் கட்டுவதற்கும் குளந்தோண்டுவதற்கும் உணவில்லங் (சத்திரங்) கள் அமைப்பதற்கும் ஆயிரக்கணக்காய்ப் பெரும்பொருள் வாரி யிறைப்பதை விட்டுவிட்டு அவ்வப்பொருளால் திருவள்ளுவர் போன்ற பெரும்புலவர்கள் பேரால் நினைவுக்குறியாகக் கழகங் களும் அமைக்கப்பெறல் வேண்டும். ஏழைப்பிள்ளைகளுக்கு உண்டியும் உறையுளுங் கொடுத்துத் தமிழ்மொழி பயிற்று வித்தல்வேண்டும்.

(௫) மணவினை முதலியன யாவையும் தமிழறிவாளர்களைக் கொண்டு தனித்தமிழ் மொழியாலேயே செய்வித்தல் வேண் டும். இயன்றவரையிற் பார்ப்பனர் மயக்குரைகளை நம்பாது வட மொழியைத் தமிழினின்றுங் களைதல் வேண்டும். வடசொற் கள் வழக்கினும் செய்யுளினும் மலிந்து வழங்கலால் நாளுக்கு நாள் அம்மொழியைத் தமிழிலிருந்து ஓட்டுதல் வேண்டும். வடமொழிப் பார்ப்பனர் தமிழன்னைக்குச் செய்த தீமையை யெண்ணினால் உடல் நடுங்குகின்றது. அம்மம்ம, எந்தாய் மொழிச் சிறப்புக் குலைந்தவா றென்னே! என்னே!

(௬) இக்காலத்தில் புதினத்தாள்கள்தோன்றுவதும் மறை வதுமாக எண்ணிறந்திருக்கின்றன. அவைகளில் செந்தமிழ்ச் செல்வி, போன்ற தனித் தமிழுக்கும் சமயத்துக்கும் நாட்டுக்கும் உழைக்கும் புதினத்தாள்களைப் போற்றுதல்வேண்டும். அவை கள் மேலும் மேலும் செழிப்போடு நடைபெற ஒவ்வொரு அன்பர்களும் தாம் தாம் கையொப்ப நண்பராகச் சேர்தலோடு பிறரையுஞ் சேர்த்தல் வேண்டும்.

(எ) மேல்நாடுகளில் ஒருவர் ஒரு சிறுநூல் எழுதி அதற்கு விலை பதினாயிரம் பொற்காசு என்று கூறினால் அவ்வமயமே அந்நூலை வாங்கிக் கருவூலத்தில் சேர்த்துப் பொன்னே போற் போற்றி வைப்பார்கள். நம் நாட்டிலோ மஞ்சி விரட்டுக்கும் கூத்துக்கும் வாரியிறைக்கும் மக்கள் இரண்டணாவுக்கு ஒரு நூல் விற்கப்பெறுமானாலும் வாங்கப்போவதில்லை. இவ்வாறேழு கினால் எவ்வாறு நமது மொழி வாழும். ஆனதால் ஒவ்வொரு தமிழ் மகனும் தத்தம் இல்லில் நூறு வெண்பொற்காசுக்காவது குறைவின்றி நூல்கள் வாங்கிவைத்துத் தாய் மொழியைப் போற்றல்வேண்டும். மொழியைப் பேணாத நாடு எதுவோ? அந்நாடு வறுமைப் படுகுழியில் விழுந்து துன்புறும். மொழி

பேணுவதனாலன்றோ மேல் நாடு எல்லாத்துறையினுஞ் சிறந்து மேல் நாடாகவே யிருக்கின்றது. நந்நாடு அது பேணாமையால் எல்லா துறையினுங் கீழ் நடாகவே கிளருகின்றது.

செந்தமிழ்ப் பற்று மிக்க செல்வர்காள்! இனிமேலாவது உண்டுடுத் துறங்கிக் கிடப்பதே இவ்வுடல் பெற்ற பயனென எண்ணாது தாய் மொழியைப் பேற்றுங்கள்; தெள்ளுதமிழ்ப் புலவர்களின் பேரால் நினைவுக்குறியை நாட்டுங்கள். கற்றுத் துறை போய நல்லறிஞரை மேம்பாடாக எண்ணுங்கள்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோற் பிறிது மொழி எங்குங்காணோம்!—பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு—நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்! தேமதுரத் தமிழோசை உலகனைத்தும் செழிக்கும்வகை செய்தல் வேண்டும்" என்னும் பாரதியாரின் வீரமொழியை நினைந்து நினைந்து இன்புற்று தமிழ் மொழியைப் போற்றி வளர்த்து நலனுறுவோமாக.

மொழிப் பற்று

[திரு. இறையோளியனார்]

தமிழ்மொழி வளர்ச்சிக்காம் சீர்திருத்தங்கள்

தமிழ்வளங் குன்றியுள்ள தற்காலத்தே அது பண்டை நிலையுறவும், தமிழகத்தார் தாம் இதுபொழ்து மாறியுள்ள, சீர்கலைந்துள்ள நிலையினை ஒருவாறு சீர்ப்படுத்தவும் ஆன ஏற்ற வழிகளை இத்தலைப்பு ஆராயப் புகுகின்றது.

முன்னதாகக் கூறிய நம்மொழி வளந்தரு நிலையிற் பொலிவுற்றிலகுமாயின் தமிழ் மக்களின் கேவல நிலையும் தானே சீர்ப்பெறும். ஆதலான், நமது மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாய சில அகத்தியமான முயற்சிகளை ஈண்டு குறிப்பிடுகின்றோம்:

(அ) பண்டைக்கால இலக்கியங்களை இக்காலத்து எளிய நிலைக் கல்வியாளரும் இனிதின் உணர்ந்து கொள்ளுமாறு மிகச் சுலப நடையில் அந்நூற்களின் நயமும், கருத்தும், தெளிவும் மேம்பாடும் விளங்க எளிதான நடைப் போக்கில் சிறு சிறு புத்தகங்களாகத் தக்கவர்களைக் கொண்டு வெளியிடல்; கல்வியாளர்கள் இந்நிலையில் முயன்று பாடுபட்டுழைத்தல்.

(ஆ) மேற்கண்ட இலக்கிய இலக்கண நூல்களின் அருமை பெருமைகளைக் கற்றறிந்த புலமையாளர்கள் அமயம் நேர்ந்துழியெல்லாம், சாமானிய சனங்களும் விரும்பும் நடையில், பலசன சமூகத்திலும் கூட்டங்களினும் நயம்பட ஊக்கம் உண்டாகும்படி, கல்லாரும் விரும்பிக் கற்க ஆவலுறும்படி எளிமையாகக் கூறுதல். இதனையே 'அரிய கற்று எளிய கூறல்' என்பர் பெரியோர்.

(இ) பிற நாட்டு மொழிகளிலுள்ள அரிய காவியங்களை, சாத்திரங்களை, சரித்திர உண்மைகளை, நம் தமிழ் மொழியில் இனிய எளிய வசன நடையில் மொழி பெயர்த்து உலகில் மிகுதியும் பரவச் செய்தல்.

(ஈ) அரிய நூல்களை வெளிப்படுத்திக் காசாசைகொண்டு அந்நூற்களுக்குப் பெரும் விலையேற்றி அல்லற்படுத்தல் தமிழ் நலம் பேணும் அறிஞர் கடனாகாது. எனவே, தமிழில் உண்மை யபிமானமும், அதன் உண்மை யபிவிருத்தியிற் கவனமும் மிக்க பெரியோர்கள் பணவருவாயை முதல் நோக்கமாகக் கொள்ளாமல் அரும் நூல்களைச் சுலப விலைக்கே விற்பார்களாயின், பிறர் எதிர்பார்த்து விற்கும் ஊதியத்தினும் மிகப் பெருக அடைதலோடு தங்களின் உண்மையான உழைப்பினால் தமிழுலகுக்கு ஒப்பற்ற பெரும் பணியைச் செய்தவர்களும் ஆவார்கள். இத்துறையில் கல்வியாளர்கள் கவனம் பெரிதும் செலுத்துதல் அவசியம்.

(உ) தமிழ்க்கல்வி, மொழி, தமிழ் அறிஞர், இவர் திறம் முதலியவற்றிற்குத் துரைத்தனத்தார் தாமே மகிழ்ந்து ஆதரவு அளிக்க முற்படுமாறு, தமிழபிமானத் தொண்டர்கள் ஒன்றுபட்டு விடாமுயற்சியுடன் உழைத்து வருதல்.

(ஊ) தமிழகப் பண்டை நிலை, பண்டைத் தமிழரசர்கள், பண்டைத் தமிழ்ப் பெருமக்கள், புலவர்கள், புரவலர்கள், அக்காலத்திய பழக்க வழக்க மேம்பாடுகள் ஆதிய புராதன சரித்திரங்களை ஊக்கத்துடன் தேடி ஆராய்ச்சி செய்தல். இவ்வகைக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் கழகங்களைத் தமிழகத்தே ஆங்காங்கு ஏன்ற அளவில் நிறுவிப் பரிபாலித்தல் ஆதியனவும் வேண்டற்பாலன. இன்னும் தமிழபிவிருத்தி கருதி எவ்வெவ்வுத்திகளைக் கைக்கொள்ளலாமோ அவையனைத்தும் புரிய இன்னே முயறல் ஆதியனவும் பிறவுமாம். இவ்வழியில் இறைவன் கருணை பாலிக்க!

வடசொற்றமிழகராதி

[திருவளர் செல்வி நாகை நீலாம்பிகை அம்மையார்]

(கஅக - ம் பக்கத் தொடர்ச்சி)

வடசொற்கள்	தமிழ்ச்சொற்கள்
இராஜஸ்ரீ ராஜஸ்ரீ	திரு
இராசதம்	கிளர்ச்சி, எழுச்சி
இராசதருமம்	அரசியற்கடமை, செங்கோன்மை.
இராசதானி ராசதானி	தலைநகர், வேந்தரிருக்கை.
இராசஸ்திரீ ராஜஸ்திரீ	அரசி
இராசதரிசனம்	அரசற்காட்சி
இராசதுரோகம் ராஜதுரோகம்	கோன்கெடு சூழ்ச்சி
இராசநீதி	செங்கோன்மை
இராசபத்தினி	அரசன்மனைவி, அரசி
இராசயோகம் ராஜயோகம்	முடிந்ததவம்
இராசராசன் ராஜராஜன்	அரசர்க்கரசன், திறைவாங்குமரசன்
இராசராசேசுவரி ராஜராஜேஸ்வரி	இறைவி, அரசர்க்கரசியாம் முதல்வி
இராசலட்சிமி ராஜலட்சிமி	அரசியற்றிருமகள்
இராசவசியம்	காவலற் கவற்சி
இராசவசீகரம் ராஜவசீகரம்	இறைவயம், இறைவயப்பாடு
இராசவர்க்கம்	அரசமரபு
இராசவாகனம்	சிவிகை
இராசவீதி ராஜவீதி	அரமனைத்தெரு
இராசாக்கினை	அரசியற்கட்டளை, அரசன் ஒறுப்பு
இராசாங்கம் ராஜாங்கம்	அரசு, அரசாட்சி
இராசாதிகாரம்	அரசியற்றலைமை, அரசியலாணை.
இராசாதிபதி ராஜாதிபதி	மன்னர்மன்னன்
இராசாத்தி ராஜாத்தி	அரசன்மனைவி, அரசி
இராசாளி	வல்லூறு

வடசொற்கள்	தமிழ்ச்சொற்கள்
இராசி	ஓரை, ஒழுங்கு, வான்வீடு
இராசிக்காரன்	செல்வவான்
இராசீகம்	அரசுமுறை
இராச்சியபரிபாலனம் ராஜ்ஜியபரிபாலனம்	அரசியற்காவல்
இராச்சியபாரம்	அரசியற்பொறுப்பு
இராச்சியம்	அரசியல்நாடு
இராட்சசன்	அரக்கன்
இராணிவாசம் ராணிவாசம்	அந்தப்புரம், அரசி இருக்கை, உவளகம்
இராணுவம் ராணுவம்	படை
இராமசீதா	அணிநுணா
இராத்திரி	இரவு
இராவுத்தன்	குதிரைப்பாகன்
இருஷபம்	காளை
இருஷிபத்தினி ரிஷிபத்தினி	முனிவன் மனைவி
இருதயகமலம்	உள்ளத்தாமரை
இருதயம்	நெஞ்சம், உள்ளம்
இருது ருது	பருவம், மகளிர் முதற்பூப்பு, பெரும்பொழுது
இருதுசாந்தி ருதுசாந்தி	பூப்புக்கழிப்பு
இரேகை	வரி
இரேக்கு	பொற்றாள், காக்காப்பொன்
இரேசகம் இரேசித்தல்	மூச்சுவிடுதல்
இரேதஸ்கலிதம்	கறையொழுக்கு, வெண்ணீரொழுக்கு
இரேதசு	கறை, துளி
இரேவதி	கடைநாள்
இரௌத்திரி	உமை
இலகரி லகரி	வெறி
இலகான் லகான்	கடிவாளம்
இலகிமா	நொய்மை
இலகிரி லகிரி	மயக்கம்
இலகு	எளிது, நொய்மை
இலங்கனம்	பட்டினி கிடத்தல்
இலச்சை	கூச்சம், வெட்கம்
இலட்சணம் லட்சணம்	அழகு, பார்வை

வடசொற்கள்	தமிழ்ச்சொற்கள்
இலட்சம்	நூறாயிரம்
இலட்சாதிபதி	நூறாயிரமுடையோன்
இலட்சியம், லட்சியம்	குறிக்கோள்
இலட்டு	பொறிவிளங்காய், பொறிமாத்திரளை
இலண்டம், இலத்தி	யானைச்சாணி
இலண்டன், லண்டன்	முருடன்
இலண்டு, லண்டு	முருட்டுத்தனம், முருடு
இலபி, லபி	தலையெழுத்து, ஊழ்
இலபித்தல்	கைகூடுதல், நேரிடல், பேறுகிடைத்தல்
இலம்போதரன், லம்போதரன்	துதிக்கையன், பிள்ளையார்
இலயித்து	ஒடுங்கி
இலயித்தல்	ஒடுங்கல்
இலவணம், லவணம்	உப்பு, உவர்ப்பு.
இலவணோதம்	உப்புநீர்க்கடல்
இலவுகீகம், இலௌகீகம்	உலகியல், உலகப்போக்கு
இலளிதை	இன்பச்செல்வி, உமை
இலாகரி, லாகரி	வெறிப்பொருள், மயக்கப்பொருள், களியாட்டு
இலாடம்	காற்பரளை
இலாபம், லாபம்	ஊதியம், பேறு
இலாயம், லாயம்	குதிரைப்பந்தி
இலாவாதேவி, லாவாதேவி	கொடுக்கல் வாங்கல், பண்டமாற்று
இலாவணியம், லாவணியம்	பேரழகு
இலாலி, லாலி	வாழ்த்துப்பாடல்

(தொடரும்)

தமிழ் இதழொலிகளைப்பற்றிய குறிப்பு

[திரு. கபசம் எழுதியது.]

(௧௭௯-ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றியலுகரம் இதழிற் பிறக்கும் எழுத்தன்மையின், அது தக்கவாறு முற்றுகரத்தால் அரண் பெறுவிடத்து இகரமாவது காட்டப்பட்டது. இதை விளக்குதற் பொருட்டு,

> 'அடித்து — அடிச்சி முடிந்து — முடிஞ்சி
> அழைத்து — அழச்சி

என்ற வழக்கு முறையை ஆராய்ந்தோம். இது பொதுவாக நூலோர் கொண்ட முறையன்றெனினும், இலக்கியத் தொடர்பு இதிலுஞ் சிறிதுண்டென்பதை யறிதல் வேண்டும். 'நீந்து' என்ற சொல், 'நீஞ்சு' எனவும், 'நீந்தினன்' என்பது 'நீஞ்சினன்' எனவும், வருதல் கூடுமென்று வகுத்து, இவ்வியல்பிற்றாய எழுத்து மாற்றத்திற்குப் போலி என்றொரு பெயருங் கொடுத்தனர் இலக்கண முணர்ந்தோர். ஆனால் போலி என்று பெயர் கொண்ட இம்முறை இரண்டொரு சொற்களளவில்மட்டில் நிற்க வேண்டிய அமைதி என்னை? இம்முறையைப் பிற சொற்களு மடங்குமாறு விரித்தலிற் பெறும் இழுக்கென்னை? முடிந்து-முடிஞ்சி, விடிந்து - விடிஞ்சி என்பனவற்றையும் போலியாகக் கொள்வதனால் இலக்கணஞ் சிதைந்து போகாது. 'அருமருந் தன்ன' வென்ற தொடர் 'அருமந்த' என வருவது பழகு தமிழின் பான்மையானன்றோ? பழகு தமிழின் ஒலி முறை எழுது தமிழிற் புகுந்து நிலை பெயராது நிற்குமாயின் புலவோர் அதற்கு யாதாயினும் பெயரிட்டு அமைத்துக் கொள்ளுவார். 'அழைத்து' என்னும் வினையெச்சத்தை 'அழைச்சி' என்றொருவன் எழுதுவானாயின், கற்றோ ரதுகண்டு அவனை இகழ்வர் என்பது திண்ணம். ஆனால் கற்றோரேத்தும் பண்டை நூல்களிலும் இவ்வழக்குண்டென் றெண்ண விடமுண்டு.

> "நெல்விளை கழனிப் படுபுள் ஓப்புநர்
> ஒழிமடல் விறகிற் கழிமீன் சுட்டு
> வெங்கள் தொலைச்சியும் அமையார் தெங்கின்
> இளநீர் உதிர்க்கும் வளமிகு நன்னாடு" (புறம்-௨௯)

இச்செய்யுளில் 'தொலைச்சியும்' என்ற சொல்லின் அமைப்பிலக்கணம் யாது? இச்சொல்லிற்குத் 'தொலை'

என்பது முதனிலையாயின், சகர ஒற்று எங்ஙனம் இடை நிலையாக வந்தது?

"அருப்பம் பேணாதமர் கடந்த தூஉம்
துணைபுண ராயமொடு தசும்புடன் றொலைச்சி" (புறம்-உஉ௪)

இதில் 'தொலைச்சி' என்பது 'தொலைத்து' என்ற வினையெச்சத்தின் திரிபா அன்று?

"சுடர்த் தொடீகேளாய் தெருவில் நாமாடு
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
பேதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி—" (குறிஞ்சிக்கலி-கடு)

'அடைச்சிய' என்று மேல்வந்த சொல்லிற்கு 'அடைவித்த' என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுகின்றார் 'அடை' என்பது முதனிலையாயின் பிறவுறுப்புகள் யாவை?

இனி, இதழிற் பிறக்கு மெழுத்துக்களின் வரலாற்றைத் தொடர்வோம். மொழி முதலிலுள்ள உகரம் ஏற்ற வழி வழக்கில் ஒகரமாகுமென்பதைப் பார்த்தோம். இதற்கொப்ப ஒகரமுஞ் சிறுபான்மை உகரமாதலுண்டு

கொடு — குடு   தொகை — துகை
தொவையல் — துவையல்   தொடக்கம் — துடக்கம்
தொள்ளாயிரம் — துளாயிரம்.

இவைகளிற் சில இடத்திற் கேற்ப ஒகரத்துடன் சொல்லப்படலாம். பெரும்பான்மை உகர ஒலியே எனது செவியிற் பட்டதால் இவற்றை எடுத்துக் காட்டாகக் கொடுத்தேன்.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து" (குறள், காலமறிதல்-௰)

இக்குறளில் 'குத்து' என்று வருஞ்சொல்லை இக்காலத்தில் 'கொத்து' என்று தான் எழுதுகிறோம். இவ்விரண்டில் எது முந்தியதென்று சொல்வதற்கில்லை. இது நிற்க,

தமிழிற் சில சொற்களை யாதொரு கருத்துமின்றி எடுத்துக் கொள்வோம், தலை, செவி, கள், சொல், தயிர், நாய், பேய், வெள்ளி, குடை, புண், பொன் இவற்றில் உயிரீறுடைய தலை, செவி, வெள்ளி, குடை என்பவற்றையும், யகரமெய்யை இறுதியாகவுடைய நாய், பேய் என்பவற்றையுந்தவிர மற்றவையாவும் வழக்கில் உகரத்தை ஈற்றிற்பெறும். கள்ளு, கொல்லு, தயிரு,

புண்ணு, பொன்னு எனவரும். யகரஒற்றையும் மகர ஒற்றையும் இறுதியாகவுடைய சொற்களையும், உயிரீறுடைய சொற்களையுந் தவிர்த்து மற்றையவற்றின் கடையில் உகரம் வந்தேறும் மரம், முகம், குளம் என்பவற்றில் உகரம் ஏறுவதில்லை. யகரச் சொற்கள் இகரத்தைப் பெறும்.

நாய் — நாயி பேய் — பேயி போய் — போயி
நோய் — நோயி

என்றாகும். தலை, முளை, கட்டி, வெள்ளி, வழி என்ற உயிரீற்றுச் சொற்கள் உகரங் கொள்ளா. இவையன்றி, வந்தான், போனான், அவன், அவள் என்பனவும் உகரங்கொள்ளா. ஆனால் இவை களிற் பெரும்பான்மை தெலுங்கில் உகரமுடிவுடையன. வந்தார், போனார், அவர் என்பவை வழக்கில் வந்தாரு, போனாரு, அவரு என்றுவரும். உயிரீற்றுச் சொற்களினுஞ் சில உகரம் பெறும்,

தெரு — தெருவு நடு — நடுவு கரு — கருவு
உரு — உருவு கொசு — கொசுவு, கொசுகு
புழு — புழுவு

ஆனால் உழு, விழு, தடு என்ற ஏவற்சொற்களில் உகரந் தோன்றுவதில்லை. ஆகார வீற்றுச் சொற்களில் ஆகாரங் குறுகு மாயின் உகரம் வரும்.

நிலா — நிலவு புறா — புறவு முழா — முழவு
விழா — விழவு விளா — விளவு

ஓரெழுத்தொருமொழிகளின்மேல் உகரம் வந்தணையும்

பூ — பூவு நா — நாவு நோ — நோவு
சா — சாவு

சில ஐகார ஈற்று மொழிகளையும் உகரம் விடுவதில்லை.

மறை — மறைவு மலை — மலைவு
குறை — குறைவு அமை — அமைவு

ஈண்டு உகரம் பெயர்ப்பொருள் தருதற்பொருட்டு வந்தது. இவற்றில் ஐகாரத்திற்குப்பின் வகர ஒற்றுத் தோன்றியதை எழுத்துப்பேறெனக்கொள்க. இங்ஙனமே இகர வீற்றுக்கிளவி கள் பேரிலும் உகரம் ஏறும்.

முடி — முடிவு துணி — துணிவு ஒழி — ஒழிவு
பிரி — பிரிவு கழி — கழிவு

மேலே காட்டிய உகர வீறுகளெல்லாம் குற்றுகர வியற்கை யுடையன. பிறப்பானும் புணர்ச்சியானு மிஃதறியப்படும். இலக்கண வமைதிக்கிசைந்த குற்றுகர வீற்றுச் சொற்களையும் மேற்கூறியவற்றுடன் சேர்த்துப் பார்க்க. உகர விறுதியுடைய சொற்களின் தொகை பெரிதென்பது தெரியும்.

(தொடரும்)

வெகுளி *

[திரு. காழி. சிவகண்ணுசாமியவர்கள், B. A.]

வெகுளியை யறவே யொழிப்பான் முயலுவல் என்பார் கூற்று வெறும் பகடியேயாம். செல்லிடம் அல்லிடம் ஓராது வெகுளலும், கொண்ட வெகுளியை நீட்டித்தலும நன்றன்று. ஆற்றலறிந்து வெகுளி நீட்டிக்கா தடக்கிக்காத்தலே அறி வுடைத்து.

இனி, வெகுண்டெழ இயல்பாய்த் தோன்றும் உள்ளப் பான்மையையும், வெகுளுமியற்கையையும் எவ்வாறு ஆற்றி யடக்குதல் ஒல்லும் என்பது முதலாகவும், வெகுளாமையைக் கைக்கோடலும் அஃதொல்லாவிடத்து வெகுண்டு இன்னு செய் யாமற் காத்துக்கொள்ளலும் எவ்வாறு என்பது இரண்டாவ தாகவும், பிறர் மாட்டு வெகுளி மூட்டலும், வெகுளி யாற்றலும் எவ்வாறு என்பது மூன்றுவதுமாகக் கீழே யாராய்வாம்.

முதலாவதாக: வெகுளியால் விளையும் பெருங் கேடுகளை யாழ்ந்து நெஞ்சிடை யோர்ந்து வாழ்க்கையில் எத்துணை யிடர்ப்பாடுகளை அது தோற்றுவிக்கிறதென்பதையு முணர்ந்து தெளிதலே வெகுளியடக்கும் விழுமிய வழியாம். அவ்வாறு தேர்ந்து ஓர்ந்து தெளிதற்குரிய காலந்தான் எப்பொழுதோ வெனின், உள்ளங் கவர்ந்தோங்கி யெழுந்த வெகுளி யொருவாறு அடங்கி யறவே தணிவுற்ற பின்னரேதான். இடிந்து விழுமிடத் தில் மோதுண்டு சிதறு மிடிசுவரணையதே வெகுளியென ஒரு அறிஞர் கூறியிருக்கிறுர். "பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்" என்பது மறை. பொறுமை யிழந்தோர் உயி ரிழந்தோரே. எறும்பையும், ஈயையும் போன்று மக்கள் வெகுளியால் பிறர்க்கு ஊறுவிளைத்து அதனேதுவாக உயிரிழத்

---

* (பேக்கன் ஆசிரியர் கட்டுரைகளினின்றும் மொழிபெயர்க்கப் பட்டது.)

தல் கூடாது. "காவாக்கால் தன்னையே கொல்லுஞ் சினம்" என்பதன்றோ கட்டளை?

வெறுத்தொதுக்க வேண்டிய இழிதகைமைகளில் வெகுளியும் ஒன்றாகும். ஏனெனில் அது பெரிதுங் காணப்படுவது இளஞ்சிறார், மகளிர், முதியோர், நலிந்தோர் என்ற உரனிலார் மாட்டே எனவே வெகுளியொழித்துப் பொறுமை கோடல் ஆண் மகனொருவனுக்கு இன்றியமையாததாகும். எனினும் அப் பொறைதானும் தனக்கின்னா செய்தார் மாட்டுத் தனக்கியல்பாயுள்ள அச்சத்தினால் தூண்டப்பட்டு எழுந்ததாகும் என்று பிறர் ஐயுறுமாறு தோற்றுதல் கூடாது; மற்றெவ்வாறோவெனின், அவர் செய்த இன்னாமையைத் தான் எள்ளியொதுக்கியிறுமாந்து சென்றதாகவே தோற்றுதல் வேண்டும். அப்பொழுதுதான் பிறர் சூழும் இன்னற்பாடுகளுக் கெல்லாம் உட்படாது மேற்பட்டமை விளங்கும். தன்னைத்தான் காக்கும் பொறையுடைமை யொன்றுமட்டு மிருந்தால் அவ்வாறு நடந்து கொள்ளுதல் எளிதே.

இனி, இரண்டாவதை நோக்குவாம். எதன் பயனாகவும், என்னபயன் கருதியும் ஒருவற்கு வெகுளி தோன்றுமென நோக்கின் அது மூன்றாகும்.—இறப்பினைச் சீறிச் செற்றங் கோடல்; தனக்கியாதுங் கேடெய்தியதில்லையென வுணர்ந்த ஒருவன் வெகுளுமாறு கண்டிலம். நெஞ்சுரமெய்தாதோரும், நுணுக்கவுணர்வுடையோருமே அடிக்கடி வெகுளி மேற்கொள்வர்; நெஞ்சுரம் பூண்டோர்க்கோ நுணுக்க உணர்ச்சி குறுகி விடுகின்றமையால் அவர்கள் எவ்வொன்றிலும் எளிதாக இன்னற்படுறுதல் இல்லை. அடுத்தபடியாக, தமக்கின்னா பிறர் செய்துழி அவ்வின்னாமை தம் பீடழிவு கருதியே இழைக்கப்பட்ட இகழ்ச்சியாகுமென ஏற்றுக்கோடல். ஏன்? இளியே வெகுளி தீட்டும் சாணைக்கல்; ஆகவே இறப்பினால் எழுந்த வெகுளி ஒரு புறமாக இவ்விகழ்ச்சி யுணர்வினால் விளையும் வெகுளி மறுபுறத்தில் முன்னதை யொத்தோ மிகுத்தோ வமையும். எனவே தமக்கின்னா செய்தக்கால், ஒருவர் அவ்வின்னாமையின்கண் இகழ்ச்சிப் பொருள் வலிந்து கோடக் கருதுவாராயின் அது வீண்வெகுளியை எழுப்பிக் கோடலேயாகும். இறுதியாகத், தன்னுடைய நற்பெயருக்குக் கேடு விளைந்ததாகக் கருத்திடைப்பட்டால் அஃது ஒருவருடைய வெகுளியைப் பெருக்கி யோங்கி யெழச் செய்கிறது. இதைத்தடுத்து வெகுளி யடக்கும் வழி யாதோவெனின், ஒருவர் தம் பெருமையையும், நற்பெயரையும், இப் புல்லிய இகழ்ச்சியுரைகள் ஒன்றும் ஊறுசெய்து விடா வென்ற

இடுக்கண் அழியா உள்ளப்பான்மையைக் கோடலே யாகும். பொதுவாகக் கூறுங்கால், வெகுளாமையை மேற்கொள்வதற் கேற்ற நல்வழி வெகுளுமுன் கால நீட்டித்தலேயாகும்; அதாவது தான் வெகுண்டு இறப்பினை யொறுக்குங் காலம் எய்திலதின்னும், எப்படியும் அது வந்தே தீரும், அக்காலை யொறுப்பல் எனத் தேறி ஆறியடங்குதலேயாகும்.

வெகுண்டக்கால் வெகுளி வயப்பட்டுக் கடுகிப் பிறர்க் கொன்றுந் தீங்கிழைத்து விடாமல் தன்னையே காத்துக்கொள்ள வேண்டின் வசைமொழி கூறுதலை ஒருதலையாக ஒதுக்கிவிட முயலல்வேண்டும். அதிலும் ஒறுக்க நினைந்தார்க்கு இடித்துரையாய்ப் படுவனவற்றை யறவே கூறுதொழிதல் வேண்டும். ஏனெனில் பொதுப்பட வசை மொழியின் பொல்லாங்கு பெரிதுங் கமழாது. இதுவே யன்றி வெகுளிமேலீட்டால் பிறர் மறை கூறிச்சொற்பழி விளைத்தலுங்கூடாது. என்னையோ வெனின் அவ்வாறு செய்தல் மக்கட்குழூஉவினின்றுந் தன்னைப் பிறர் அஞ்சி யொதுக்குவதற்கே வழிதேடுவதாகும். இனி வெகுளி யேதுவாக எடுத்த எது ஒன்றையும் இடை முறித்து விட்டு வருதல் என்பதுங் கூடாததாகும். உள்ளங் கரைந்து குமிறினும் உய்விலாப் பழிச்செயல் புரிதல் சால்புடைத்தன்று.

இனி மூன்றாவதாக, தன்னை யொழித்துப் பிறர் மாட்டு வெகுளி மூட்டலையும் வெகுளியாற்றலையும் நோக்குவாம். நிறையழிந்து கதமுற்று ஒருவன் நெஞ்சுதடுமாறி நிற்கும் நிலையே அவனை வெகுளி மூட்டற் கேற்ற காலமாகும். அந் நிலையில் அவனுக்கு இளிவரவளிப்பதாயுள்ள பகுதிகளை மேன் மேலும் எடுத்துக் காட்டி அவனது மேன்மையை யழித்தல் எளிது. எழுந்த வெகுளியை யாற்றுதற்குரிய வழிகள் இவைகளுக்கு எதிரிடையானவையேயாம். ஒருவனுக்கு வெகுளி மூட்ட வல்லதாக விருக்கக்கூடிய எவ்வொன்றையும் அறிவிக்க நேர்ந்துழி அதைத் தக்கவாறு காலம் நீட்டித் தறிவித்த லொன்று. முதற்கண் நெஞ்சிடைப்பட்ட வொன்றை மாற்றுதல் எளிதாகாதன்றோ? இரண்டாவதோ. அவனுக்கிழைக்கப் பட்ட தீங்கு இகழ்ச்சி கருதியன்று; ஆனால் அச்சத்தினாலோ அறியாமையினாலோ, காய்தலினாலோ மற்றிவை போன்ற எது வொன்றினாலோ என வெடுத்துக்காட்டுவதே யாகும்.

பொருளின் பிண்டக் கருத்துகள்

எடுத்துக்கொண்ட பொருள் மூவகைத்தெனப் பொருளின் துவக்கத்திற் பிரித்துக் காட்டப்பட்டவையே.

"ஆறுவது சினம்"

"செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து
இல்லதனிற் றீய பிற"

"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்"

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

"திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று";

"எள்ளிப் பிறருரைக்கு மின்னாச்சொற் றன்னெஞ்சிற்
கொள்ளிவைத் தாற்போற் கொடிதெனினு—மெள்ள
அறிவென்னு நீரா லவித்தொழுக லாற்றிற்
பிறிதெனினும் வேண்டாந் தவம்"

"உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு."

குறிப்பு. 1. ஸெனக்கா என்னும் இலத்தீன் புலவர் "வெகுளி" என்று தன்னுடைய நூலில் எழுதியதாகும்.

2. இத்தமிழ் மறையின் கருத்து லூக் எழுதிய 'சுவிசேஷ'த்தில் ஒருவாறு காணப்படுவதையே பேக்கனார் எடுத்துரைத்தார்.

3. இக்கருத்து வர்ஜில் என்ற பேரறிஞரின் "ஜியார்ஜிக்ஸ்" என்னும் நூலிற் காணப்பட்டது.

தமிழ்ச்செல்வம்

[மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள்]

தமிழ்ச் செல்வம் என்னும் சொற்றொடர் பொருட் செல்வம் அருட்செல்வம் என்புழிப்போலத் தமிழாகிய செல்வம் என விரியும். தமிழ் என்பது ஈண்டுத் தமிழ்மொழியைக் குறிக்கும். செல்வம் என்பது அறம் இன்பம் ஆகிய இரண்டையும் துணைக்காரணமாக நின்று தருதலோடு வீடுபேற்றுக்கு இன்றியமையாத அருட்செல்வத்தையும் பயப்பித்துத் தானும் நுகரப்படும் பொருளாம். இவ்வாறே தமிழும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கினையும் பயப்பிக்கும் கருவியாய் நின்று தானும் கற்றறிவுடைய மக்களால் நுகரப்படும் ஒரு பொருளாதும் இப்பெற்றி நோக்கியே தமிழ்ச் செல்வம் என உரைக்கப்பட்டது.

தமிழ் என்னும் சொல் இனிமை என்னும் பண்பை உணர்த்தும். அஃது அப் பொருட்டாதலைத் 'தமிழ் தழீஇய சாயலவர்' "தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே" என வருஉம் சான்றோர் வாக்குக்களால் அறிக. இச் சொல்லுக்கு இப் பொருள் உண்மையினைக் கொள்ளாதார் தத்தமக்குத் தோன்றியவாறெல்லாம் உரைப்பர்.

தமிழ் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இவ் வுலகமுழுவதும் வடமொழியாகிய ஆரியம் இந் நாட்டிற் புகுதற்கு முன்னரே விளங்கி ஒளிர்ந்த அருமந்த மொழியாம். ஆதலால் இது தோன்றிய காலம் இன்னதென வரையறுக்கலாகாது. அதுபற்றி வடமொழியைக் கூறுவதுபோல், "ஆதிமொழி" என்னாது, "அநாதிமொழி," என்றே ஆராய்ச்சியாளர் கூறுவர். இவ் வுண்மையினை, "சதுமறை ஆரியம் வருமுன் சகம் முழுவதும் நினதாயின், முதுமொழி அநாதியென மொழிகுவதும் வியப்பாமே." என்று திரு. சுந்தரம்பிள்ளை அவர்கள் மனோன்மணீயத்தில் கூறுமாற்றானும் அறிக.

தமிழ் பண்டுதொட்டே இயல்வரம்புடைய இனிய மொழியென்பதும், அது வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வகையாக மாறுபட்டுவரும் மொழி அன்றென்பதும், எக்காலத்தும் ஏற்றம் பெறத்தக்க ஆற்றல்வாய்ந்த அருமை மொழியென்பதும், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் என்னும்

பலமொழிகளுக்குத் தாய்மொழியென்பதும், வடமொழியோடு ஒத்த சிறப்புடைத்தாய், தொன்மை, அழியாமை முதலியவற்றால் உயர்ந்த சிறப்புடைத்தாய் விளங்கும் தனிமொழியென்பதும் ஆன்றோர் நூல்களாலும், உரைகளாலும் நன்று தெளியப்படும் உண்மைகளாம்.

ஒரு மொழி சிறந்ததென்றால் அதின்கண்ணுள்ள நூல்கள் சொற்சுவை, பொருட்சுவைகளால் விஞ்சியிருத்தல் வேண்டுமென்பது எல்லாருக்கும் ஒப்பமுடிந்த உண்மை. இவ்வுண்மையைக்கொண்டு தமிழ் மொழியை ஆராய்ந்து பார்ப்போமானால் அது சிறந்தமொழி யென்பது எளிதில் புலப்படும். தமிழிலே செய்யுள் வகையில் சிறந்துள்ள நூல்களையும், செந்நாப் புலவர்களையும் கணக்கிட்டுப் பார்க்கினும் ஏனைமொழிகளுக்கு இல்லாத் தனிச்சிறப்பு இம்மொழிக்கு உண்டென்பது பெறப்படும். எந் நாட்டிலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் திருக்குறள் போன்ற ஓர் அரியநூல் எழுந்தது? எந்நாட்டிலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இலக்கியப் பொலிவும் இலக்கணவரம்பும் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ் வகையும் தோன்றின? ஆங்கில மொழியின் அருமை பெருமையெல்லாம் இருநூறு முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டவையே யாகும். இலத்தீன், கிரேக்கு, எபிரேயம், ஆரியம் முதலான தொன்மொழிகளோடு இணையொத்த தமிழ்மொழி அவை யாவும் வழக்கு வீழ்ந்து ஒழியவும் இன்றும் நின்று நிலவும் தனிப் பேர்ஆற்றல் வாய்ந்தது என்பதை எண்ணுந்தோறும் இறுமாப்படையாத தமிழன் தாய்மொழி பற்றில்லாச் சழக்கனே யாவான்.

வடநாட்டினின்றும் விரிவந்த ஆரியம் தெலுங்கை அடிப்படுத்தியது; மலையாளத்தை மணந்துகொண்டது; கன்னடத்தில் கைவைத்தது; துளுவத்தைச் சூழ்ந்துகொண்டது; செந்தமிழ் மருங்கிலும் செல்லத் தொடங்கியது. ஆனால் அச் சூழலில் அகப்படாது தனது ஒப்பற்ற உண்மையை இன்றும் அழியாமற் காத்துக்கொண்டு அதனோடு ஒப்புமையாய் எதிர்த்து நின்று "நான் நினக்கு எவ்வாற்றானும் எளியேனல்லேன், பல்லாற்றாலும் நின்னினும் சிறந்தேன்," என்று ஒளிரும் தமிழ் அன்னையின் கன்னித்தன்மையை என்னென்பேன்!

தமிழ்மொழியை நம் முன்னோர் தெய்வம் என்றே பேணி வந்தனர். நாம் அதனைப் போற்றாது கொன்னே காலங்கழிக்கின்றோம். பிறநாட்டார் தமது மொழியை வளம்படுத்த

அரும்பாடுபட்டு வருகின்றனர். நாமோ ஒவ்வொரு நாளும் நமது அரிய மொழியை ஆரியத்துக்கும் ஆங்கிலத்துக்கும் கொள்ளைகொடுத்துக்கொண்டு வருகின்றோம். நமது முன்னோர் நமக்காக அரிதிற்றேடி வைத்த பெரும் புதையல்களாகிய அரிய நூல்களைக் கண்ணெடுத்தும் பார்க்கின்றோம் இல்லை; அவற்றின் கூரிய பொருள்களைக் காதுகொடுத்தும் கேட்கின்றோம் இல்லை; காசுகொடுத்தும் அவற்றைக் காக்கின்றோம் இல்லை. இவ் வண்ணம் மடிந்திருப்போமாயின் நாம் உற்றபொருளைக் கொள்ளை கொடுத்து ஒன்றுமில்லாதவராய் ஒழிவது திண்ணம். இந் நாட்டிலே ஒரு சிலர் தமிழில் புலமைபெற்றுத் தமிழால் வயிறு வளர்த்தும், தமிழால் பொருள் ஈட்டியும், தமிழால் எல்லாச் சிறப்பையும் அடைந்தும் அதனைப் பாராட்டாமல், வடமொழியில் அகர உகர மறியாதிருப்பினும் அதனையே சீராட்டியும் பாராட்டியும் வருகின்றனர். கம்பராமாயணப் பிரசங்கம் என வாளா பெயர் வைத்துக்கொண்டு வான்மீகமுனிவருக்கு ஏற்றங் கூறிச் செல்வோர் பலர். திருவள்ளுவர் திருக்குறளைப் பற்றிக் கூறப்புகுந்து மனுவின் அநீதிக்கும் அமைவு உரைப்பார் சிலர். அகப்பொருள் நூல்களை ஆராய்வார்போல அபிநயம் காட்டி வடமொழியில் காமசாத்திரம் மிக விரிந்தது என்று கையை விரிப்பார் சிலர். தெலுங்கு கன்னட முதலான மொழிகளை ஆதரிப்பதில் எல்லாக் குலத்தாரும் ஒரே தன்மையான விருப்பமுடையவராக இருக்கின்றனர். ஆனால் தமிழுக்கோ என்றால் பார்ப்பனர் மெல்லென நழுவி விடுகின்றனர். இதற்குக் காரணம் தமிழ் வடமொழியை அடியோடு ஏற்றுக்கொண்டு அடிமையாகாமல் தனித்து நிற்கும் ஆற்றல் உண்மை அவர்க்கு அழுக்காற்றை விளைத்தலே யாகும். அந்தோ! இவர் செய்கை கொடுமையினும் கொடுமை!

நம்மவரேனும் நம் செந்தமிழ்த் தாயைப் போற்றாமலிருத்தல் அழகிதோ! மேல் நாட்டார் தமது மொழியோடு இரண்டு மூன்று மொழிகளைச் சேர்த்துப் படிக்கின்றனர். நம்மவரில் கற்றவர் என்போர் பெரும்பான்மையாய் ஆங்கிலம் கற்றவர். அவரில் பலர்க்குத் தமிழ் தெரியாது. அவர் தமக்குத் தமிழ் சிறிதும் தெரியாதென்பதனால், ஆங்கிலம் தமக்குப் பெரிதும் தெரியுமெனப் பிறரெண்ணி மதிப்பரெனக் கூறி மகிழ்வாருமுளர். தமிழ் தெரிந்தவர் பலருக்கு ஒரு சிறிதும் ஆங்கிலம் தெரியாது. இது தமிழ்மக்களின் கலைக்குறைவையே மிகப்பெரிதும் காட்டுகின்றது.

தமிழிலே எல்லா ஓசையும் நிரம்பவில்லை என்பர் ஒரு சாரார். எல்லா ஓசையும் நிரம்பவேண்டும் என்னும் விதி

யென்ன ? பண்டைத் தமிழர் தம் இயற்கைக்குப் பொருத்தமான ஒலிகளினாலேயே உலகத்திலுள்ள காட்சிப்பொருள் கருத்துப்பொருள் ஆகிய எல்லாவற்றிற்கும் பெயரிட்டிருக்கின்றனர். நாகரிகம் முதிர முதிர அவருக்கு வேண்டப்படும் புதிய புதிய கருவிகட்கும் புதிய புதிய கருத்துக்கட்கும் வேண்டப்படும் புதிய புதிய சொற்களை ஆக்கிக்கொள்வா ராயினர். அவ்வளவும் உண்மையாயிருக்க வடநாட்டிலிருந்து அழையா வீட்டுக்கு நுழையாச்சம்பந்தியாக வந்து நுழைந்த வடமொழி ஓசைகளைப் பார்த்து இவ்விவ் வோசைகள் தமிழில் இல்லையே என்று கூறுவார் இப்பொழுது தொடுவழக்குத் தொடர்ந்துள்ள ஆங்கில மொழியின் ஓசையும் தமிழின்கண் இல்லையென்பார் போலும் ! எம்மொழியிற்றான் எல்லா ஓசைகளும் நிரம்பியிருக்க இயலும் ? அன்றியும் எல்லா ஓசையும் என்பது என்ன ? ஓசைகளின் முடிவு யாது ? ஒருவன் பலமொழிகளின் ஓசையை எடுத்துக்கொண்டு இவைகளே உலகத்திலுள்ள எல்லா ஓசையும் என்று கூறுதல் பொருந்துமா ? அற்றன்று, எழுத்தோசையே ஈண்டு எடுத்துக்கொண்ட தெனின், எழுத்தோசை இன்னது தான் என்னும் வரையறை யாண்டுளது ? ஓர் ஓசையை எழுத்தோசை அன்று என்று கூறுதற்குப் பிரமாணம் அவ்வோசையினால் யாதொரு எழுத்தும் எம்மொழியினும் அகப்படாமையன்றிப் பிறிதென்னை. இனிப் புதிது புதிதாகத் தோன்றும் சொற்களுக்குக் கூறும் காரணம் என்னை ? ஆதலின் இவர் உரைப்பன வெல்லாம் வெறும் போலியாக ஒழிதல் காண்க. இனித் தமிழ்மொழி எழுத்துக்களின் கூட்டுறவால் தமக்குரிய ஓசையேயன்றி வேறு ஓசை பெறுதலு முண்டு என்பதை 'எடுத்தல், படுத்தல், நலிதல், உழைப்பின் திரிபுந் தத்தமிற் சிறிதுளவாகும்' என்னும் நன்னூற் சூத்திரத்தானு முணர்க.

தமிழைப்போல் இலக்கண வரம்பு வாய்ந்த மொழி வேறொன்றுமில்லை. ஆரிய இலக்கண நெறி பலபடியாக அறிவுக்குப் பொருத்தமின்றி விரிந்துகிடப்பது. ஆங்கிலமொழியோ ஒரு வரம்புக்கு முட்படாதது. ஏனைய மொழிகளோ காலந் தோறும் மாறுமியல்புடையன. தமிழிலக்கணம் அன்றுதொட்டு இன்றுவரை நின்று நிலவுதற்குக் காரணம் அது தேறிய மக்கள் இயல்புக்கு இசைந்த முறையில் அமைக்கப்பட்டதனாலேயே என்றுணர்க.

இனி ஒரு மொழி எத்துணை இயற்கை யாற்றல் வாய்ந்ததோ அத்துணையே அது சிறப்புப் பெறும். தமிழ் மொழி இயற்கை யொலியால் இரண்டு மூன்று எழுத்துக்களால் ஆக்கப்

பட்ட சொற்பான்மை யுடைமையினால் அஃது எத்துணையும் விரிதற்கிசைந்த ஆற்றல்வாய்ந்ததென்பது சொல்லாமே அமையும். இத்தகைய இயற்கை நலங்களை இவ்வளவோடு நிறுத்தித் தமிழின் கண்ணுள்ள அழியாச் செல்வங்களாக விளங்கும் நூல் நலங்களைப்பற்றி ஒரு சிறிது கூறுவாம்.

தமிழில் முதன் முதலாகச் செய்யப்பட்ட இலக்கணம் அகத்தியம் என்ப. அகத்தியம் குறைந்தது ஐயாயிரம் ஆறாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது. அது தலைச்சங்கத்துநூல். 'இலக்கியங் கண்டதற்கு இலக்கணம்' என்பதை அகத்தியமே எடுத்துக் கூறுவதனால் அகத்தியத்துக்கு முன்னரே தமிழிலே சிறந்த இலக்கியங்கள் திகழ்ந்தன என்பது உயர்வு நவிற்சியாகாது. அல்லதூஉம் தமிழிலே சில்சில இலக்கணநூல்களும் ஒரோஒர் அதிகாரம்பற்றி எழுதப்பட்டிருத்தல் வேண்டுமென்பதும் ஊகிக்கப்படும். எவ்வாறு ஊகிக்கப்படுமெனின், அகத்தியம் முத்தமிழும் விரவிய விரிந்த இலக்கணம் எனப்படுதலின் முத்தமிழும் விரவாத 'யாப்பியல்' 'களவியல்' என்றாற்போலத் தனித்தனி எழுதப்பட்ட இலக்கணங்களும் இருந்திருத்தல்வேண்டுமென்பது உற்றுநோக்குவார்க்கு இனிதுபுலனாம். அகத்தியர் தமிழுக்கு இலக்கணம் வகுத்தார் என்பது இனிவருங்காலத்திலே தமிழ்ப்புலமைகுன்றவரின் (கடவுள் அங்ஙனம்வாராதுகாக்க) போப்பையர் இலக்கணம் படித்த ஒருவன் தமிழுக்கு இலக்கணம் வகுத்தால் போப்பையர் என்று கூறுதலையொக்கும், அகத்தியந்தானும் போப்பையர் தமிழிலக்கணத்தை ஆங்கிலமுறையோடு ஒப்பச்செய்ததுபோன்று வடநூன் முறைமைக்கு ஒப்பத் தமிழிற் செய்யப்பட்டதாகும். அதனானன்றே அது தமிழ்மக்கள் தன்மைக்கு ஏலாததாய் இறந்தொழியத் தமிழர் தன்மைக்கு ஒத்த பழைய இலக்கண முறையிலே செய்யப்பட்ட தொல்காப்பியமே இன்றுவரை வழங்கலாயிற்று. அகத்தியர் தமிழில் இலக்கணம் செய்தார் என்பதனோடமையாது தமிழையே செய்தாரென்றும் வரலாற்று முறைமையறியாத புலவர்கள் பாட்டாகவும் நீட்டிவிட்டார்கள். இறந்தனபோக நம்தவப்பயனாக இன்றுவரை எஞ்சி இருப்பது **தொல்காப்பியம்** இத்தொல்காப்பியக் கடலுள் பொருட்டுறையுள் குளித்துத் தமிழ்மக்களுடைய பண்டைநாகரீகம் என்னும் ஒளிவிடும் முழுமணிகளைக் கண்டெடுக்கலாம். இதுவே நம்முன்னோர் அறிவு, அன்பு, ஆக்கம், தன்மை, அரசியல், ஒழுக்கம்முதலிய எல்லாவற்றையும் நாம் சிறிதேனும் அறிதற்குக் கருவியாக இலங்குவது. எழுத்தும் சொல்லும் ஆராயாது விடினும் பொருட்பால் ஒன்றைமட்டுமேனும் தமிழ்மகன் ஒவ்வொருவனும் ஆராயற்பாலன். அங்ஙனம் ஆய்ந்தாலன்றி அவ

னுக்குத் தம்முன்னோருடைய தன்மை யாதும் விளங்காதென்க. தொல்காப்பியத்தின்கண் மரபியலிலே அவ்வியல் எழுத்துச்சொற் பொருள் மரபைக் குறிப்பதென அறியாது சாதியாகிய மரபு ஆண்டுக் கூறப்படவில்லையெனப் பிறழக்கொண்டு இடையிடையே சில சூத்திரங்களைச் செருகிவிட்டாருமுளர். இவ்வாறு இடைச் செருகும்வழக்கம் பண்டே நம் இந்தியருக்கு உள தென்பது, வேதம் மிருதி முதலிய நூல்களிற் காணப்படும். ஆபாச மந்திர தந்திரங்களினாலும் இனிது தெளியப்படும்.

தொல்காப்பியத்தில் தமிழர் மணமுறை ஒருவனும், ஒருத்தியும் தம்முள் ஒருவரை ஒருவர் கண்டு நெஞ்சம் கலந்த பின்னரே நிகழ்வது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரியர்கூறும் எண்வகை மணத்துள் சிறந்ததும் நெடுங்காலத்துக்கு முன்னர்த் தோன்றியதுமாகிய களவியல் காந்தர்வமணமே தமிழர் முற்படக்கொண்டொழுகிய ஒழுக்கம். இவ்வொன்றைக்கொண்டே தமிழ்மக்களுடைய தனி நாகரீகம் நாட்டப்படும். தமிழர் குல வேற்றுமையுடையாரல்லர் என்பதும், வீரரைப் போற்றினவ ரென்பதும், பெண்பாலரை மிக்க மேனிலையில் வைத்திருந்தவ ரென்பதும், அரசியற்றுறையில் அறத்தையே கடைப்பிடித் தொழுகியவரென்பதும், அகமும் புறமும் ஒத்து ஒழுகியவரென்பதும், கற்புநெறி தவறாத பொற்புடையவரென்பதும், பிறவும் தொல்காப்பியத்தால் அறியக்கிடக்கின்றன. இன்னும் இவைபோன்றவற்றையும் அறிதற்குக் கருவியாக உள்ள தொல்காப்பியத்தைப் பல்லாற்றானும் ஆய்ந்தறிந்து தமிழர் நலம்பெறுவாராக!

இரண்டாமடியில், ஆனால் பயன்முறையில் முதற்படியில், எடுத்துச்சொல்லப்படும் நூல் திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறள். இந்நூலால் தமிழ்மக்கள் தமது உயர்வை உலகமுழுவதும் ஒளிரச்செய்யும் பேறுபெற்றனர். இதன்பாற் கூறப்பட்ட அறம் பொருள் இன்பங்கள் தமிழர்முறையையே தழுவியவை. வடமொழியில் உள்ள ஒருகுலத்துக்கு ஒரு நீதி வகுக்கும் மனு முதலிய சாத்திரங்களையும், வேள்வியைக்கூறும் வேதம்முதலியவற்றின் கொள்கைகளையும், உயிருக்காக மானத்தையும் விடலாம் என்னும் தாழ்ந்த கருத்துக்களையும் ஒழித்து எல்லாருக்கும் ஒரு நீதியும், உயிர்க்கொலை புலால்உண்ணல் இல்லாத நல்லறமும், மானமே உயிரினும் சிறந்ததென்னும் உயர்வையும் எடுத்து விளக்கி ஆற்றல் அழியும் என்று அந்தணர்கள் ஏட்டின் புறத்து எழுதாமல் யாவரும் ஓதலாகாதென மறுத்து வைத்திருக்கும் மறையினும் விஞ்சிய பெருமை உடையதாய் யாவருக்கும் பொதுமறையாய் என்றும் அழியாததாய்த் திகழும்

அற்புதநூல் திருக்குறள். இதிற் சொல்லப்படாத பொருளில்லை; இதில் சொல்லப்படாத உயர்ந்த கருத்துக்கள் எவ்விடத்துமில்லை. இது பல சீரிய மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டிருத்தலும் திருவள்ளுவர் உருவச்சிலை பிரிட்டிஷ்மியூஸியத்தில் வைக்கப்பட்டிருத்தலும் இதன் குறைவறு பெருமையை மறுவற நன்குணர்த்தும்.

இனித் தேவாரம் திருவாசகம் நாலாயிரப்பிரபந்தம் முதலிய அன்புச்சுவை ததும்பும் அரியநூல்களும், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய பொருள் நிரம்பிய அறிவுநூல்களும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம், கம்பராமாயணம் முதலிய நவரசஞ்சொட்டும் பரந்து விரிந்த பெருங்காப்பியங்களும், பத்துப்பாட்டு எட்டுத்தொகை முதலிய இயற்கையழகு பொழியும் சங்க இலக்கியங்களும், அறுசுவை யதனினும் உறுசுவைகொழுமிய உலா, மடல், கோவை, பிள்ளைத்தமிழ், கலம்பகம், பள்ளு, அந்தாதி முதலிய அளவற்ற நூல்வகைகளும் ஒவ்வொருவரும் வாழ்க்கையிலே ஒவ்வோர்காலத்துப் படித்துப்படித்து ஆரா இன்பம் நுகரும் அரும்பெருஞ்சிறப்புடைய செந்தமிழ்த் தனிச்செல்வங்களாம் என்க.

இவற்றுள் ஈடும் எடுப்பும் இன்றி இலங்கும் தொல்காப்பியத்தைத் தமிழர் பழையவரலாற்றைக் கூறும் வேதம்என்னலாம். அறிவு நூல்களின் முடிவைக் கூறும் சிவஞானபோதம் சிவஞானசித்தியார் என்பவற்றை உபநிடதங்கள் என்னலாம்! பொதுமறையாகிய திருக்குறளை ஸ்மிருதிகள் எல்லாவற்றினும் மேம்பட்ட நீதி ரத்தினமெனலாம். ஊனையும் உயிரையும் உருக்கும் தித்திக்கும் திருவாசகத்தை என்னென்னலாம்? இது வடமொழி இருக்குக்களினுஞ் சிறந்தது என்பதை 'மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தின் மாண்டோர்கள் கனஞ்சடையென்றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ' என்றும், 'கடையூழிவருந் தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்உடையார்உன்வாசகத்தில் ஒரு பிரதி கருதினதே' என்றும் உள்ளவாறுணர்ந்த பெரியோர் கூறுமாற்றானறிக. நம்மாழ்வார் திருவாய்மொழி வடமொழி வேதத்தின் முன் செல்லுகின்றது. பெருமாள் தென்மொழி மறையின் செல்வப்பெருக்கிலே ஈடுபட்டுச் சுவைகொள்ளப் பின்னே செல்கின்றார்; அதன் வடமொழியோ அவரை நாடிப் பின்னே செல்கின்றது. கம்பராமாயணம் கருத்தழகில் வான்மீகத்தினும் மாட்சிகொண்டது. சங்கத்தமிழ் நூல்கள் இயற்கை நெறி திறம்பாமல் உள்ளது உள்ளவாறே கிளக்கும் தன்மையால் பொருட்பொருத்தமில்லாத கற்பனையலங்கார வருணனைகள்

மலிந்துகிடக்கும் வடமொழி இலக்கியங்களை விலக்குவாங்குகின்றன. தமிழ், செய்யுள் முறையில் எத்தகைய மொழியினும்-வடமொழியாயினுமாகுக, இலத்தீன் ஆகுக, கிரீக் ஆகுக, மேலோங்கிச் செல்லும் மேன்மைவாய்ந்தது என்பது உண்மை நவிற்சி என்பதை எடுத்துக்காட்டுகளுடன் காலம்வாய்ப்புழி வாய்ப்புழியெல்லாம் வகுத்துக்காட்டுவாம்.

தமிழ்மக்களே! நம்முன்னோர் நமக்குத் தேடிவைத்த அருஞ் செல்வங்களை இழந்துவிடாதீர். முன்னரே பலகோடி இழந்தீர். இன்னும் இழந்து வருகின்றீர். தூங்கினவன் கன்று கடாக்கன்றுயிற்று. சொல்வார் இன்மையால் உங்கள் வழக்குப் பல விடங்களில் தோற்றுப்போயிற்று. இன்னும் தூங்கிக்கிடப்பீரேல் நாகரீகமற்ற மிலேச்சரென சிறிது காலத்தில்மதிக்கப்படுவீர். நீங்கள் பண்டை நிலைக்கு வரவேண்டுமாயின், நீங்களும் உலகத்தில் நல் வாழ்வுவாழவேண்டுமாயின்,பிறநாட்டார்உங்களைமதிக்கவேண்டுமாயின், பிறமொழியார் உங்களை அவமதிக்காமல் இருக்கவேண்டுமாயின் உங்கள் முன்னோருக்குப் பொருள் தெரியாத பிதிர் கடன் செய்வதைக்காட்டினும் அவர்தம் அறிவு நிறைந்த வாய் மொழியாகிய செந்தமிழ் மொழியைக் கற்றும் கேட்டும் கற்பித்தும் கேட்பித்தும் பாதுகாத்தலே பிதிர்கடனுமென்பதையும் நீங்கள் உங்கள் கால்வழியாருக்கு அழியாமல் பாதுகாத்துத் தரும் தாய்ப்பொருள் என்பதையும் உணர்வீர்களாக. 'கடவுள் எல்லாருக்கும் பெரியவர்; எனக்குத் தமிழே பெரிது' என்றும், 'தமிழால் என்னை வையினும் மகிழ்ந்து ஏற்பேன்' என்றும், 'தமிழுக்குச் செய்யும்வேலை ஒருவன் தனக்குச் செய்யும் வேலை' என்றும் கூறிய சான்றோர் ஆர்வமொழிகளை நீங்கள் கேட்டதில்லையா? தமிழை வளர்க்கத் தமிழ்மக்களே வம்மின்! இயன்றவாறெல்லாம் துணைதம்மின்' தாய்க்கடன் ஆற்றுமின்! தந்தைசொற் போற்றுமின்! மகன்கடன் ஆற்றுமின்! குருமொழி பேணுமின்! பொதுமொழி நாணுமின்! உண்மை உயர்வே காணுமின்! காணுமின்!!

(இச்சிற்றுரை தமிழாசிரியர் மணி. திருநாவுக்கரசு முதலியார், பெருந்தகையாளர் பனகால் அரசரவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்ற நாயர் பெருமான் கல்விக்கழகத்தின் ஆண்டுவிழாவிலே நிகழ்த்தப்பட்ட பொருளுரையினைத் தழுவியது.)

தொண்டர் படை

[திரு. இலங்கை S. சின்னதம்பி]

(௧௯௭ - ம் பக்கத் தொடர்ச்சி)

௧. மாசி லாத மணிதிகழ் மேனிமேற்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசி னாலெத் திசையும் விளக்கினார்
பேச வொண்ணாப் பெருமை பிறங்கினார்.

௨. பூத மைந்தும் நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காதல் உறைப்பி னெறிநின்றார்
கோதி லாத குணப்பெருங் குன்றனார்.

௩. கேடு மாக்கமுங் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

௪. ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பார மீசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீர மென்னால் விளம்புந் தகையதோ.

தொண்டர்தம் பண்புகளுள் மனத்தூய்மையே முதன்மை யுடையது. முதற் பாட்டில் விளங்கும் கருத்தும் இதுவே. 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தும் அறன், ஆகுல நீர பிற' என்றார் செந்நாப் புலவரும். அறன் வேறு தொண்டு வேறன்று. தொண்டே அறன். தொண்டு மலரும் இடம் தூய மனம். உள்ளத்தூய்மை வளமிக்க நிலம்; அதிற் செழித்தோங்கு பயிர் அறப்பெருந்தொண்டு என்றறிக. திருநீறு அணிவோர்க்கு ஒளியையும், புனிதத்தையும் அளிப்பதுபோல், உள் நீறாகிய உளத்தூய்மை அடியார்கட்கு உள்ளொளி பெருக்கும். உயர்ஞானப் பேருணர்வையும் அளிக்கும். திருநீறு அணிந்தோர் எத்துணை அழகர். புனிதம் மலர்ந்த பொற்பார் காட்சியன்றோ அவர்காட்சி! இதற்காக வாகுதல் பிற நெறியாளர்களும் திருநீறு அணிதல் கூடாதோவென யான் நினைப்பதுண்டு. தூய்மையாய், அழகாய், ஒளியாய் இலங்கும் எம் ஆண்டவனை நினைவூட்டும் குறியன்றோ திருநீறு. சிவப்பெருந்தூய்மையை அறிவுறுத்தும் இத்திருக்குறியை யாம் என்றும் போற்றல் வேண்டும். தொண்டர்கள் சிறப்பாக நீற்றின் பெருமையை உணர்ந்தவர்களாயிருத்தல் வேண்டும். தொண்டர்தம் அகப்

பொலிவே புறத்து நீறாய் இலங்கல் வேண்டும். வெளிநீறு படை படையாகப் பரக்கப் பூசினும், 'தூய்மை' எனும் உள்நீறு உள்ளத்தில் மலராவிடில் பயன் ஒன்றும் இல்லை. இப்பெற்றி உணராதோர் எத்தனை பேர் நீற்றுச் சைவ சித்தாந்திகளாய் இருக்கின்றார்கள். அவர்களைச் சோற்றுச் சித்தாந்திகள் எனல் பெரிதும் பொருத்தமுடைத்து.

உளத்தூய்மை என்பது 'உண்மை'. அழுக்காறு முதலிய அழுக்குகள் மாய்ந்து 'உண்மை' ஒளிரும் உள்ளமே தூய உள்ளம். கரவும், வஞ்சகமும் அற்ற இடத்திற்றான் 'உண்மை'த் தெய்வம் நிலவும். 'உண்மை' உள்ள இடத்து என்னதான் இல்லை. உலகத்து உயர் பண்பெல்லாம் உதிக்கும் இடமும் அதுவே யன்றோ. 'உண்மை'தான் கடவுள். 'உண்மை'யின் மிக்கதொன்று இவ்வுலகிடை இல்லையென்க. இறைவனை 'மெய்ப்பொருள்' என்றும், 'முழுமுதற்பொருள்' என்றும், இன்னும் பலவகைகளாக 'உண்மை' என்னும் பொருளில், நம் பழந்தமிழ் மக்கள் வழிபட்டு வந்த செம்மையை நினைமின். இக்கால மக்களுள் முதல்வராய் இலங்கும் நம் காந்தியடிகளும் 'உண்மை'யையே கடவுளெனப் போற்றுகின்றார். 'உண்மை'யையே தெய்வமாக வழிபட்டும் வருகின்றார். 'உண்மை'யின் செம்மையையும் இறைமையையும் இப்பெரியாரது வாழ்விலே நிரம்பக் காணலாம். தொண்டர்கட்கெல்லாம் அரியதோர் இலக்காய்க் கலங்கரை விளக்கமாய் நம் காந்தியடிகள் இன்று இப் பேய் உலகிற்குக் காட்சி யளிக்கின்றார். இவரே 'மெய்'யடியார்; இவரே இக்காலத்தில் 'உண்மைத் தெய்வத்தையும்,' 'அருட்கடவுளையும்' வழிபட்டு வாழ்வின் மெய்ப்பேறு எய்திய திருவாளர். இப்பெரியாரது அடிச் சுவடுகளைப் பின்பற்றுவதே தொண்டர் நெறியெனக் கொள்க.

இரண்டாவதாகத் தொண்டர்கட்கு 'அஞ்சாமை' வேண்டும். அஞ்சா நெஞ்சுடைய வீரர்களே தொண்டாற்றும் செம்மை வாய்ந்தவர்கள். 'யான்' 'எனது' 'எனக்கு' என்னும் சிறுமைகளைச் சிதைத்துப் பிறர் நலம் பேணும் அவாவினால் உந்தப் பெற்று முன்வரும் தொண்டர்களே உண்மை வீரர்கள். அவர்கள் உலகத்து எதையும் அஞ்சமாட்டார்கள். இறுதியே வரினும் இறைவழி நிற்கும் திருவுடையார்க்கு அச்சம் யாண்டுளது? உலகத்து எவ்வகை ஊறும் அவர்களைத் தாக்கமாட்டா. இறைவனது நினைப்பும் அவனடித் தொழும்புமே அவர்கள் மனத்தில் எந்நாளும் குடிகொண்டிருக்கும். பூதமைந்தும் நிலையிற் கலங்கினும் மாதொரு பாகனை மறக்கமாட்டார்கள்.

“வானந்துளங்கிலென் ! மண் கம்பமாகிலென் ! மால்வரையுந் தானந்துளங்கித் தலை தடுமாறிலென் ! மீனம்படிலென் ! விரிசுடர் வீழிலென் ! வேலை நஞ்சுண்டு ஊனமொன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கேது” என்றார் அப்பர் எம்பெருமானும். அஞ்சாமை இல்லாதோர் கடவுள்நெறி பற்றினோர் அல்லர். அவர்கள் உண்மைத் தெய்வத்தை உணர்ந்தவர்களும் அல்லர். உண்மை உள்ள இடத்தில் அஞ்சாமையும் உண்டு. உண்மை மலர்; அஞ்சாமை அதன் முருகு. ஈண்டு அப்பர் பெருமானது திருவாழ்வு என் மனதில் ஒளிர்கின்றது. அதுவே ‘உண்மை’ வழிப்பிறந்த ‘அஞ்சாமை’ வாழ்விற்கு அரியதோர் எடுத்துக்காட்டு. ‘நாமார்க்குங் குடியல்லோம், நமனை யஞ்சோம், நரகத்திலிடர்ப்படோம், ஏமாப்போம், பிணியறியோம், பணிவோமல்லோம்...........” என்ற வீரமொழிகளை உன்னுந்தோறெல்லாம் என் நெஞ்சுறாஉம் உயர்விற்கோர் அளவேயில்லை. உண்மைத் தொண்டனது மனப்பான்மை எத்தன்மையது, எத்துணை உயர்வுடையது என்பனவெல்லாம் இப்பாட்டில் விளங்குகின்றன. பொல்லாப் புன்சமணர்கள் நம் அப்பருக்கு எத்தனை ஊறுகள் நிகழ்த்தினர். நஞ்சை ஊட்டினர்; நீற்றறையில் இட்டனர்; கடலினுட் பாய்ச்சினர். ஆ! எத்துணைப் புன்மை ! ஆயதென்ன ! அப்பர் மனம் தளர்ந்ததா ? இல்லை. தினைத்துணையேனும் இல்லை. அச்சம் என்றொரு பொருளில்லாத இடத்து ஊறுதான் என்செய்யும் ? ‘மாசில் வீணையும், மாலைமதியமும், வீசுதென்றலும், வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசன் எந்தை இணையடி நீழலே’ என்ற திருப்பாட்டில் நீற்றறை தனக்கு எத்தகைக் காட்சியையும் இன்பத்தையும் அளித்ததெனை அப்பர் விளக்கியுள்ளார். கல்லுடன் பிணித்துக் கருங்கடலுள் அவரைச் சமணர்கள் பாய்ச்சியபொழுதும் இறைவன் திருநாமத்தையே இசைத்துக்கொண்டிருந்தாராம். என்ன உறுதி ! என்ன அஞ்சாமை ! இவரது வாழ்விற்கு நிகராக, ‘அஞ்சாமை’ வாழ்வை எந்த நாட்டு வரலாற்றிலும் காணமுடியாதென்று தயங்காது சொல்லலாம். இவர் எலும்பெல்லாம் அஞ்சாமை. குருதியெல்லாம் வீரம், யாக்கையெல்லாம் தூய உண்மை. செய்கையெல்லாம் தொண்டு. இவரே தொண்டர்கட்கெல்லாம் எக்காலத்தும் தலைவன். தொண்டராவார் அனைவரும் இப்பெரியாரை வழிபட்டு அவர் நெறிபற்றி உழைத்தல் வேண்டும். அப்பர் பெருமானது வாழ்வைப் படியாதோர் தொண்டைப் பற்றிப் பேசுதலும் ஆகாது; நினைத்தலும் ஆகாது. அவர்கட்குத் தொண்டு என்றால் என்னவென்றே தெரியாது. அப்பரே தொண்டர்; அப்பர் வாழ்வே தொண்டு. ஆகையால் அப்பர் வரலாற்றை எழுத்

தெழுத்தாகப் படித்தல் வேண்டும். அவர்பேரில் பெருஞ்சபைகள் கூட்டல் வேண்டும். அவரது வீரப்பாக்கள், உயர்ஞானச் செம்மொழிகள், நாடெங்கும் பரவல்வேண்டும். அப்பொழுது தான் தொண்டின் செம்மையை எல்லோரும் உணர்வார்கள். இக்காலத்தில் தென்னாட்டிலும், இலங்கையிலும் இராமகிருஷ்ண பரமகம்சருக்கு எத்தனை விழாக்கள்! விவேகானந்தருக்கு எத்தனைக் கழகங்கள்! ஆறுமுக நாவலருக்கு எத்தனைக் குருபூசைகள்! அப்பருக்கு ?....ஆ! என்மனம் புழுங்குகின்றது. எத்துணைப் புன்மை! என்மீது எவரும் வெகுளாதீர். இராமகிருஷ்ணரையேனும், விவேகானந்தரையேனும், ஆறுமுகநாவலரையேனும் மற்று எப்பெரியோரையேனும் யான் வெறுப்பதில்லை. இப்பெரியார்களையெல்லாம் யான் இன்றும் வழிபட்டே வருகின்றேன். இராமகிருஷ்ண விவேகானந்த நாவலருக்கும், இன்னும் எத்தனை பேர்கட்கும் சிறப்புச் செய்யலாம். அவர்களெல்லாம் பெரியார்கள்தாம். மெய்யடியார்கள்தாம். ஆயின் எம் அருள் ஞானத்தாதைகளுக்கு என்ன சிறப்பு? அப்பருக்கு எத்தனைப் பூசைகள்? ஆளுடை பிள்ளைபேரில் எத்தனைக் கழகங்கள்? நம்பியாரூரர் எங்கே? மணிமொழித் தேவன்தான் எங்கே? இவர்களையெல்லாம் புறத்தே ஒதுக்கி வைத்துவிட்டு நாவலர்களுக்கும், பாவலர்களுக்குமா திருவிழாக்களும் குருபூசைகளும்? இப்பெரியார்கட்குரிய சிறப்புகளைச் செய்யா தொழிந்தமையானும், அவர்களை மறந்துவிட்டமையானுமே தமிழ்நாட்டிற்கும் சைவத்திற்கும் தமிழ் மொழிக்கும் இத்துணை இழிவு. இது காறும்செய்த புன்மைக்கு இரங்குவோம். இப்பெரியார்களையே எம்முழுமுதல் ஆசிரியர்களாகக் கொள்வோம். நம் நாடு உயிர்த்தெழுந்து உய்தற்கும் இதுவே நெறியென்க. 'உண்மையை'யும் 'அஞ்சாமை'யையும் நிறுவிப்போந்த இச்செம்மையாளர்களைப் பின்பற்றுவதே தொண்டர்நெறி. 'பானல் வாயொரு பாலன் ஈங்கிவனென்று நீ பரிவெய்திடேல்,.........ஈனர்கட் கெளியனல்லேன். திருவாலவாயரன் நிற்கவே' என்று நம் தமிழ் இளங்காளை (சம்பந்தப்பெருமான்) மங்கையர்க்கரசியாருக்கு உறுதிமொழி செப்பியதுபோல் தொண்டர்கள் அனைவரும் அஞ்சா நெஞ்சுடன் 'உண்மையை'ப் பரப்ப உறுதிகொள்ளல்வேண்டும். அஞ்சாமை இல்லாத இடத்துத் தொண்டு ஒருபொழுதும் வளம் பெறாது.

(தொடரும்.)

மடற்றிறம்

[இளவழகனார்]

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடல்அல்லது இல்லை வலி. (திருக்குறள். நாணுத்—க)

'அடைதற்கு அரியரான பெண்மக்களோடு காமவின்பத்தை உள மார நுகர்ந்துவிட்டுப் பின்பு அதனைப் பெறுதற்கியலாது வருந்துகின்ற ஆண் மக்களுக்கு அக் காமத்துன்பத்தை நீக்கி ஓராறுத லின்பந் தரவல்ல வலிமை யுடையது மடலல்லது வேறில்லை' யென்க.

காமம், வலி, மடல் என்பன முறையே காமவின்பத்தையும், வலிமை யுடையதையும், மடலாலான குதிரையையும் உணர்த்துதலால், அவை ஆகுபெயர். காமம் காமத்தன்மையையே உணர்த்துவதாகக் கொண்டு 'காமத்தாற் பெரிது வருந்திய' வென்று உரை கூறலுமாம். திருச்சிற்றம் பலக்கோவையாரில் 'உலகின்மேல் வைத்துரைத்தல்' என்னுமொரு துறை மடற்றிறப் பகுதியிற் காணப்படுதலால், இக்குறளுக்கு உலகின் மேல் வைத்துரைத்தலாகவே பொருள் செய்யப்பட்டது, ஆசிரியர் பரி மேலழகர் பின்னுள்ள குறட்பாக்களின் பொருளியைபு நோக்கித் தலை வன் 'தன் துணிபுரைத்த'லாக அதற்கு உரையெழுதுகின்றார். இங்கு ஏமமென்பது துன்பத்தை நீக்கி ஆறுதலின்பந் தருவது போன்ற மற்றொருவகைத் துன்பம்.

தலைவனது குறையிரந்த எண்ணத்தோடு ஒத்து மதியுடம்பட்ட தோழி, தன் தலைவியின் கருத்தையும் மெல்ல அறிந்துகொண்டு பின்பு அதனைத் தலைவனோடு சொல்லத்தொடங்கியபோது, தனக்குள் தோன் றிய நாணத்தால் தலைவனே முதன் முதல் குறையிரந்து கேட்டலை விரும்பிப் பேசாதிருப்பள். தலைமகன் மதியுடம்படுத்துதலைக் கருதி முதன் முதற் பாங்கியிடைச் சென்றபோது அவள் பெருநாண முடையவளா யிருந்தாள். பாங்கியிடைச் சேர்ந்ததிலிருந்து நெடுநேரமாகத் தலைமகன் நெருங்கிப்பேசி மிக்க உரிமை யுடையவனாய் அவள் மாட்டுப் பழகினமை யால், அவட்கு முதலிலிருந்த நாணம் வரவரக்குறைந்து வந்தது. மேலும் தோழி எத்துணை நாணப்பட்டுத் தலைவனுக்கோர் அமைதிதரும் மறு மொழியை எவ்வளவு நேரங்கூறாது நிற்கின்றாளோ, அத்துணையுந் தலைவனுக்கு அவ்வளவு நேரம் ஆற்றாமை மிகும். அவ்வாற்றாமையைக் கண்ட தோழி அறிவும் அன்பிரக்கங்களும் உடையவளாதலால், அவை தாம் மிகுந்து நிற்கும்போது அவள் நாணுக் கெடும். இவ்வாறு தலை வனுக்கு ஆற்றாமை பெருகப்பெருகத் தோழிக்கு நாணங் குறைந்து கொண்டே வந்தது. இந்நிலையில், இனிமேற் பெருகுதற்கு இடமில்லை யென்னும்படி தலைமகனுக்கு ஆற்றாமை யென்பது முழுதும் பெருகி ஒரு வரம்பெய்தி நிற்ப, அங்ஙனமே இனிமேற் சுருங்குதற்கு இடமில்லை யென்னும்படி தோழிக்கும் நாணமென்பது முழுதும் சுருங்கி ஒரு வரம் பெய்தி நின்றது. இவரிருவர்க்கும் வாய்ந்த இந்நிலையினை இறையனாரகப் பொருளுரையாசிரியர்,



மடற்றிறம்

'அவனது ஆற்றுமையும் இதனினூங்குப் பெருகுமாறில்லையெனப் பெருக்கத்துக்கு வரம்பெய்தி நின்றது: இவளது நாணும் இதனினூங்கு நுணுகுமாறில்லையென நுணுக்கத்திற்கு வரம்பெய்தி நின்றது'*

என்று மிக அழகாகக் கூறுவர். தோழியின் நாணம் இத்துணைச் சுருங்கி இல்லை யென்றே சொல்லும்படி மிகக் குவிந்து நுணுகி யொழிந்தாலும், பெண்டிர்க்கு அஃது இயற்கையே உள்ள உயிர்த்தன்மையாதலால், தோழி தானறிந்த தலைவியின் கருத்தைத் தலைமகனோடு தானே முதலிற் பேச்செடுத்துச் சொல்லுதற்குச் கூசினள்.

என்னை?

"முன்னுற உணரினும் அவன்குறை யுற்ற
பின்ன ரல்லது கிளவி தோன்றாது"*

என்று இறையனார் கூறுதலின் என்க. இவ்வளவு நாள் கெஞ்சிக் குறையிரந்துந் தோழி மறுமொழி யேதுங் கூறாது வாளா நிற்ப, அஃதறிந்த தலைமகன் தோழியுந் தலைவியும் ஒருங்கிருக்க நோக்கித் தனக்குட் பெருகி வரம்பெய்தி நின்ற ஆற்றாமைத் தன்மையால் எழுந்த சொற் கொண்டு, 'நீங்கள் என்குறை முடித்து அருள் செய்யாமையால் என் உயிர் அழிகின்றது. இதனை அறிமின்கள்' என்று கூறுவான். பெண்டிர்க்கு நாணமென்பது ஒரு பெருந்தடைப்பா யிருத்தலால், இவன் இங்ஙனங் கூறியும் அவர்கள் முன்வந்து ஒரு மொழியேனுங் கூறியபாடில்லை. இனி என் செய்வான்? மடலேறியேனும் இக்குறையை முடித்துக் கொள்வதே செயற்பாலதா மென்று எண்ணுவானாயினன். இதனையே மேலே தலைப்பிலுள்ள திருக்குறள் உணர்த்துவதாயிற்று.

மடலேறுதலென்பது காம எண்ணம் முதிர்ந்து தலையெடுத்து நின்றபோது, அதன் வாய்ப்பட்ட ஆண்மக்கள் தாங் காதலித்த தலைமகளைக் கூடுதற்கு விரும்பி மறைவாகவுஞ் சூழ்ச்சியாகவும் வேண்டுவன வெல்லாந் தோழியை யுடம்படுத்திப் பல நாட்களாகச் செய்து பார்த்து அவற்றால் அஃது இயலாதது கண்டு, அவ்வியலாமையின் வாயிலாக அந்நேரத்தில் உணர்ச்சி தெரியாது மிக்கெழுந்த காமக் காழ்ப்பினால் தமக்குள்ள நாணத்தையும் நல்ல ஆண்மையையும் இழந்து, எருக்கம்பூ மாலையைத் தலையிற் சூடி, பனைமடற் கறுக்குகளாற் செய்யப்பட்ட ஒரு பொய்க் குதிரைமேலே காற்சதைக ளறுந்து இரத்தங் குழைந்து கசிய உண்மைக்குதிரை யென்று ஏறிக்கொண்டு அந்தத் தலைவியின் உருவத்தையுந் தம் பெயரையும் ஒரு படத்திலெழுதிக் கையிற்பிடித்து, அவள் இருக்கும் வீட்டிற்கு அருகாமையாகத் தெருவின் நான்கு முனைகள் கூடும் நடுவிடத்தில் அக்குதிரையைப் பிறரால் இழுப்பித்து வெளிப்படையாக எல்லார்க்கும் ஆரவாரஞ் செய்தலாகும். இவ்வுண்மை,

"மாஎன மடலும் ஊர்ப, பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியுஞ் சூடுப,
மறுகின் ஆர்க்கவும் படுப,
பிறிதும் ஆகுப காமங்காழ்க் கொளினே."†

என்று குறுந்தொகையிலும்,

* இறைய. ௧. † குறுந், ௧௭.

"ஈசன சாந்தும் எருக்கும் அணிந்துஓர் கிழிபிடித்துப்
பாய்சின மாஎன ஏறுவர் சீறூர்ப் பனைமடலே"*

என்று திருச்சிற்றம்பலக்கோவையிலும் மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருத்தல் காண்க.

பண்டைக்காலத்திலே இவ்வழக்கந் தமிழ் நாட்டின்கண் நடந்து வந்த தென்பது,

"கடலன்ன காம முழந்தும் மடல்ஏறாப்
பெண்ணின் பெருந்தக்க தில்"‡

என்னுந் திருவள்ளுவர்தம் வாய்மொழியினால் ஐயுறவின்றிப் பெறப்படும். ஏனென்றால், கடல்போல அத்துணை மிகுந்த காமத்தால் வருந்தினும் பெண்மக்கள் மடலேற மாட்டார்கள்' என்று காணப்படும். இந்தத் திருக்குறட் கருத்தில், காமம் மிகுந்தாலும் பெண்மக்கள் ஏற மாட்டார்களெனவே அக்காமம் மிகுந்த காலத்து ஆண்மக்கள் மட்டும் ஏறுவார்களென்பது பெறப்படுதலா லெனக. அங்ஙனமானால் இம் மடலேறும் வழக்கம் அத்துணை நாகரிகமானதோ வெனின், நாகரிக மென்பது உயிர்களின் இயல்பினை வைத்தன்றே அறியப்படும். இயற்கையே தனக்குரிய பெண்மகளை இறைவன் திருக்குறிப்புப்படி எவ்வகையானும் மணஞ்செய்து கொள்வது அவட்குரிய ஆண்மகனின் கடமை. அந்தப் பெண்மகளை அந்த ஆண்மகனுக்கே திருமணஞ் செய்துவைத்தல் அவர்கட்குரிய உற்றார் பெற்றார் முதலானவர்களின் கடமை. இவர்கள் இக்கடமையினின்றுந் தவறுதலே நாகரிகமில்லாச் செய்கையாகும். அங்ஙனம் அக்கடமையினின்றுந் தவறாமையும், அத்தவறாமைக்குச் செய்யும் செய்கைகளும் நாகரிகச்செய்கைகளாகும். ஆகவே ஆண்மக்கள் இயற்கைக் களவின்வழி உள்ளம் வீழ்ந்து தெரிந்தெடுத்துக் கொள்ளப்பட்ட பெண்மக்களைக் கூடுதற்பொருட்டு முயன்று, அம்முயற்சிக்கு இடையூறு கண்டபோது மடலூர்ந்து வெளிப்படுதல் அவர்தம் நாகரிக வுணர்ச்சியையே காட்டுமென்று கொள்க. நன்மை பயக்குமொரு செய்கை எளிதில் நிறைவேறாத விடத்துத் தன்னுயிரைக் கொடுத்தேனும் அதனை நிறைவேற்றுதலே உண்மையான ஆண்மையும் பெருமையுமாகும். மடலேறுதலென்பது உடலுக்குச் சிறிது துன்பங்கொடுத்து அதன் வழியாகத் தனக்குந் தன் காதலிக்கு முள்ள உண்மையன்பினையும் உள்ள ஒற்றுமையையும் பிறர்க்குக் காட்டி அதன் வாயிலாக அவளைப் பெறுகின்ற ஆண்மக னொருவனின் நற்செயலாகும். அங்ஙனமன்றித் தாங் காதலித்த பெண்மகள் தமக்கு முற்றிலுமே கிட்டாளான விடத்து மலையின்மேலேறி உருண்டு வீழ்ந்து உயிரையே துறக்கும் உண்மைக் காதல்வலிவாய்ந்த ஆண்மக்களும் உண்டு. இங்ஙனம் வரைபாயும் வழக்கத்தையே மேற்காட்டிய குறுந்தொகைச் செய்யுளிற் போந்த 'பிறிதுமாகும்' என்னுந் தொடர் குறிப்பதாயிற்று. இஃது உயிரையே இழப்பதான பெருந்துன்பம் பயத்தலால் இது பிறிதென்று குறிப்பினாற் சுட்டப்படுவதாயிற்றெனக.

---

* திருச்சிற், எஉ. ‡ திருக்குறள், நாணுத், எ.

"மடன்மா கூறும் இடனுமா ருண்டே"*

என்று வருந் தொல்காப்பியக் களவியல் நூற்பாவுக்கு உரையெழுது மிடத்து ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

"உம்மையால் வரைபாய்வ லெனக்கூறும் இடனும்
உண்டென்ற வாறு'

என்று கூறுதலாலும் நன்கு துணியப்படும். ஆகவே இவ்வாறெல்லாம் நன்மைபயப்பதொரு செய்கையின்கண் முயற்சியெடுத்து இம்முயற்சி பயன்படாமை காணும் பொழுது தன்னுடலுயிர்க்கு ஊறு விளைத்துக் கொண்டேனும் அதனை நிறைவேற்றிக் கொள்ளுதல் வீரத்தன்மையேயா மென்க. அதனிலும், இறைவ னின்பத்தோடொத்து அதனை விளைத் திடுங் கருவியாயும் உலக வாழ்க்கையின் முதன்மையான பயனுயும் நின்று பிறப்பின் நோக்கத்தை ஈடேற்றுவதாயுள்ள காதற்செய்கையின்கண், அதற்கு உதவியாகத் தனக்கு இயற்கையே யுரிய பிறப்புக்காதலியைப் பெறும் பொருட்டுச்செய்யும் நன்மைதரு முயற்சியிலா அது தவறு மிடத்து எவ்வகையேனும் முயன்று முடித்துக்கொள்ளாது வீண்பட்டி ருப்பது? ஒருவன் தன்னியற்கைக்காதலியை மடலேறி மண முடிப்பது இழிந்ததென்று கருதி வாளாவிருந்தானுயினும், வேறு மகளிரை மண முடிப்பானுயினும் அதனினுங்கு நாகரிகமில்லாத் தீய செயல் அவற்கு வேறில்லையென்பது அறிஞரெனப்படுவா ரெல்லார்க்கும் ஒப்ப முடிந்த தோ ருண்மைக் கருத்தாகுமென் றறிந்துகொள்க. தனக்குரிய அவ்வியற் கைக்காதலியை அவன் மணவானுயின், அவன் பிறப்புச் சிறிதும் பயன் படாதென்பதே உண்மையாவதாம். ஏனென்றால் ஆணியல்பும் பெண் ணியல்பும் உயிரொன்றிக் கலத்தலாற் பெறப்படுவதொரு கலப்புநுகர்ச் சியே அறிவின் விரிவும் இறைவனடியின்பமும் விளைத்திடுதலா லென்பது. ஆகவே இதற்குமாருக இங்ஙனம் மடலூர்தலும் வரைபாய்தலும் வெறுங் காமஆசை கொண்டே நிகழுமாயின், அப்போது அஃது எள்ளி இழித்து நாகரிக மில்லாக் கொடுஞ்செயலென்று கூறித் தள்ளத்தக்கதே யாகும். மற்று அங்ஙனமன்றி அது,

'மேன்மக்களாற் புகழப்பட்டு ஞானவொழுக்கத்தோ
டொத்த இயல்பிற்ருகலானும் பழிபாவ மின்மையா
னும் எனப்படுவ தென்று விசேடிக்கப்பட்ட'†

காதலன்பு கொண்டு நிகழுதலின் உயர்த்துப் பாராட்டப்படத் தக்கதாய் நிற்குமதனை உயர்த்துப் பாராட்டாது அதற்கு வேருகப் பிறிது கூறுதல் கூறுவார்தம் நாகரிகமில்லாப் பேரிழிவி னியல்பையன்றே காட்டு கின்றது !

அற்றன்று,

"விழுத்தலைப் பெண்ணை விளையான் மாமடல்
மணியணி பெருந்தார் மார்பிற் பூட்டி

* தொல், கள, கக † இறைய, க.

வெள்ளென் பணிந்துபிற ரெள்ளத் தோன்றி
யொருநாண் மருங்கிற் பெருநா ணீக்கித்
தெருவி னியலவுந் தருவது கொல்லோ"*

என்றுவரும் மற்றொரு குறுந்தொகைச் செய்யுளால், அம்மடலேறுதலைப் பிறரெல்லாம் இழித்து எள்ளனஞ் செய்வாரென்பது பெறப்படுகின்றதே யெனின், அவரெல்லாங் கருத்து நோக்காது வெறுஞ் செய்கையை நோக்கி மட்டும் அங்ஙனம் எள்ளி எள்ளனஞ் செய்வாராதலாலும், அங்ஙனம் அது செய்வாருங் கீழ்மக்களாவரே யல்லாது உயர்ந்த கருத்தும் ஆன்ற அறிவுமுடைய மேன்மக்களாகாராதலாலும், அம்மேன்மக்களெல்லாரும் மடலேறினனென்று கேள்விப்பட்ட அந்தநொடியிலேயே இவன் அவளல்லாமல் உயிர்வாழானென்று அவன் காதலுண்மையுணர்ந்து மணமுடித்து வைக்கமுயல்வரே யல்லாது இகழாராதலாலும், திருமணச் செயல்களென்ற அளவிலேயே பொதுவாகக் காமத்தன்மையைஅதன்மேலேற்றி எள்ளனஞ் செய்வது உலகத்திலே கீழோர்மாட்டுக் காணப்படுதலாலும் அக்கீழ்மக்களின் அறியாமைச் செயல்கொண்டே உயர்ந்த நற்கருத்தின்பாலதாய்த் தூய அறிவும் பழுதற்ற காதலும் முறுகி யெழுந்து விம்மிவிளங்கிய ஞான்று அவர்பால் அவரை மறந்து ஏற்படும் மடலேறுஞ் செய்கைக்கு ஓரிழிவு கூறுதல் பொருந்தாமை காண்க.

எனினும், கருத்து உயர்ந்ததாயினும் அதன்பொருட்டுச் செய்யும் செயல் இழிந்ததேயாமன்றோ வெனின், இறைவன் றிருக்குறிப்பாகிய உயர்ந்த கருத்தினையே உள்ளங்கொண்டு அக்குறிப்பின்வழியே நடக்கும் அடியார் பெருமக்க ளெல்லாரும் செய்யுஞ் செயல்கள் உலகத்தவரால் இழிந்தனவாக எண்ணப்படுவதுபற்றி அச்செயல்களேனும் அவற்றைச் செய்யும் அவ்வடியார்களேனும் இழிவுக்கும் எள்ளனத்திற்கும் இடமாதலுங்கூட உண்டுகொலோ வென்று கூறி மறுக்க.

"ஞாலமதின் ஞானநிட்டை யுடையோருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன் றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருட னுன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலினொ டாடலிவை பயின்றிடினும் பயில்வார்"†

என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தமும் இங்கே நினைவுகூரற்பாலது. ஆகவே உயர்ந்த கருத்தின் மேலதாய் நிகழும் மடற்றிறம் இகழ்ந்து எள்ளப்படுவதன்றாய் உயர்த்துப் பாராட்டப்படுவதற்கே உரியதாமென்றறிந்துகொள்க.

---

* குறுந், ௧௮௨. † சிவஞான சித்தியார், சுபக், ௮ : ௩௨.

இனி இவ்வகையான மடலேற்றத்தைப் பற்றித் தலைமகன் தோழியின்மாட்டுத் தான் ஏறுவதாக முதலிற்கூறுது 'காதலியின்கண் வலைப் பட்ட காதலர்களெல்லாம் அவளைப் பெற்றிடும் பொருட்டு மடலூர்தலுஞ் செய்வ' ரென்று 'உலகின்மேல் வைத்துரைத்த'லாகக் கூறி அங்ஙனங்கூறியுந் தன் னெண்ணம் நிறைவேறுமை கண்டு அதன்பின்னர் அச் செய்கையைத் 'தன் துணிபுரைத்த'லாகக் கொண்டு, அங்ஙனங் கொண்டவிடத்தும் நேரே தான் காதலித்த தலைவியை உணர்த்தாமல் யாரோ ஒருத்தியைக் கூறுவதுபோல முன்னிலைப்புறமொழியாக வைத்து 'என்னையும் ஒருத்தி தன் உயிர்க்காதலுக் குள்ளாக்கி மடலேறும்படி செய்துவிட்டனள்' என்று கூறுவான். இவ்வாறு அவன் தன்னெண்ணத்தைத் துணிந்து கூறியும் இயற்கை நாணத்தாற் றடைசெய்யப்பட்டு வாய் திறவாதிருந்த தோழிக்கு உன் தலைவியை என்னிடம் விரைந்து கூட்டாமையால் நாளைக்கு நின் சீறூர்த் தெருவிடையே பனைமடலை மாவென வூர்ந்து வந்திடுவே' னென்று வெளிப்படையாகக் கூறுவானாயினன். இது 'மடலேறும்வகை யுரைத்த' லெனப்படும். இங்ஙனமிவன் தோழிமாட்டு மடலேறும் வகையுரைக்குந் திறனெல்லாம்,

"தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை யுழக்குந் துயர்"

"நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றா ரேறு மடல்"*

என்னுந் திருக்குறள்களிற் செவ்விதின் விளங்கிக் கிடக்கின்றன.

தலைவன் இங்ஙனங் கூறக்கேட்ட தோழி, அவன்றன் வரம்பிகந்த ஆற்றாமையைக் கண்டு தன்பால் முன்னேயிருந்த அவ்வியற்கை நாணுமழிந்து கெட, இன்னும் நாம் வாய்திறவா திருந்தால் இவன் மெய்யாகவே மடலேறவுங் கூடுமென் றஞ்சி யிரங்கி அவன்முன் வந்து பேசத் தொடங்குவாள். தொடங்கினவள், மடலேறுவீர்களானால் உங்கட்குள்ள இரக்கத்தை நீங்கள் யாரிடத்திற் செலுத்துவதாக ஆகும்?' என்று கேட்பள். அஃதாவது தலைவன் மடலேறுவானானால் அதனை யறிந்த அவன் காதலி உடனே ஆற்றாளாய் மிகவருந்தி உயிர்விடுதலுஞ் செய்வாளாதலால், அவள் மாட்டு உண்மையில் இவன் அருளுடையானாயின் இங்ஙனம் மடலேறுவேனென்று கூறுதல் கூடாதன்றே ? ஆகவே உங்கள் இரக்கத்தை உங்கள் தலைவியின்பா லல்லாமல் வேறியார்பாற் செலுத்தப்போகின்றீர்கள் என்று தோழி கேட்டாள். மேலும் இவன் உண்மையிலேயே தன் தலைவியின்பால் மிக்க அன்பும் இரக்கமும் உடையவனாதலால், அவ்வருட்டன்மை யுண்மையால் அவன் மடலேறுதல் அரிதென்று தோழி குறிக்கொள்வாளாயினள். ஆதலாற்றான் இங்ஙனமிவள் கூறி விலக்குந்துறை திருச்சிற்றம்பலக்கோவையாரில் ' அருளாலரிதென விலக்க' லெனப்பட்டது.

---

* நாணுத், ரு, ங.

இங்ஙனங் கூறியும் அவன் அமையானாய் நிற்பவே அதுகண்ட தோழி நீங்கள்படமெழுதும்பொழுது உங்கள் தலைவியின் பேச்சையும் நடையையும் எப்படி யெழுதுவீர்கள்'? என்றும், அவைதாம் எழுதமுடியாவாயினும் அழகின் திறம்வாய்ந்த அவளுடைய உறுப்புகளை மட்டும் அத்துணை எளிதாய் உங்களால் எழுதிவிடுதல் இயலுமா? என்றுங் கூறி மடலேறு தலை விலக்குவள். இவை 'மொழிநடை யெழுத லரிதென விலக்கல்,' 'அவயவ மெழுத லரிதென விலக்கல்' என்னுந் துறைகளாகும். 'அவயவ மெழுத லரிதென விலக்கற்கு மாணிக்கவாசகப்பெருமான்

"யாழு மெழுதி யெழின்முத் தெழுதியிரு ளின்மென்பூச்
சூழு மெழுதியொர் தொண்டையுந் தீட்டியென் தொல்பிறவி
யேழு மெழுதா வகைசிதைத் தோன்புலி யூரிளமாம்
போழு மெழுதிற்றொர் கொம்பருண் டேற்கொண்டு போதுகவே"*

என்று தமது கோவையிற் சொல்லும் பொருளும் மிக அழகு பெற நிறுத்திக் கூறிய திறம் அறிந்து மகிழத்தக்கது. இந்தத் துறையினை அடுத்துத் தலைமகன் தன்னால் எழுதமுடியுமென்று எழுதிக் காட்டிய விடத்து 'இங்ஙனமோ நீங்கள் எழுதுவது: ஈது நன்றாயில்லை' யென்று கூறி விலக்குந் துறை யொன்று இறையனாகப்பொருளுரையிற் காட்டப்படுகின்றது. அதனைக் கோவையாசிரியர் காட்டிலர்.

இனி இவ்வாறெல்லாங் கூறியும் மடலேறுதலையே உட்கொண்டு அதன் கண்ணேயே தலைமகன் முனைப்புவைத்தலின், 'நீங்கள் நன்றாய்ப் படமெழுதாமைக்காக நான் உங்கள் மடலேற்றத்தை விலக்குகின்றேனென்பதில்லை: உங்கள் தலைவியை உங்களோடு கூட்டுவித்தற்கு என்னாலாவன செய்யலாமென்றுதான் விலக்கினேன். அவள் குறிப்பை அறிந்து வருகிறேன். அது மாறுபாடாயிருந்தால், பின்பு வேண்டுமானால் உங்கள் விருப்பப்படி செய்யுங்க' ளென்று தான் உடம்படாது விலக்குவள். ஈது கேட்டதிற் றலைமகன் சிறிது அமைதி பெற்றானாயினும், இன்னுங்கூட தோழி இங்ஙனங் கூறுகின்றனளே யென்னும் ஆற்றாமை மிக்கானாய் நிற்பவே, அவனை முற்றிலும் ஆற்றி அமைவிக்கக் கருதி 'யான் உங்கள் குறையினைக் கட்டாயம் முடித்துத் தருவேனென்று' தான் உடம்பட்டே விலக்குவாள். 'உடம்படாது விலக்கல்' 'உடம்பட்டு விலக்க' லென்னும் இவையிரண்டு துறைகளினாலுந் தலைமகன் நெஞ்சமமைந்து மடலேறுதல் செய்யானாய் நிற்பன். உடம்பட்டு விலக்கிய தோழியும் தலைவியாவாளைக் கூட்டுதற்காக அவளை இணக்குதற் பொருட்டு அவள்மாட்டுச் சென்று குறைநயப்புக் கூறுவா ளென்பது.

---

* திருச்சிற், எ௯.

உலகிய னெறி

[திரு. இ. மு. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள்.]

(கசுரு-ம் பக்கத் தொடர்ச்சி)

உலகியனெறியை உலகநடையாகிய நெறியென விரிப்பர் சான்றோர். சான்றோரியன்ற நெறி யென மற்றொருதிறனுகவும் யாம்பகுத்து இவ்விருநெறிக்குமே பொருள் செறிப்பான் புகு கின்றாம். சான்றோரென்ற தீண்டு தமிழ்ப் பெருமக்களானு ரையே குறிப்பிப்பாம், இத்தொடர்மொழிப் பொருளையாராய் வுழி உலகு இயல் நெறி யெனுமிம் மும்மொழித்தன்மையாதோ வெனு மோர் கடாநிகழுமன்றே? அக்கடாவிற்கு விடையிறுத்து மேற்போதனன்றன்றோ! ஆம். அவற்றுள் உலகு. நங்கண்ணுற் காணப்படும் உயிர்ப்பொருளும் உயிரில் பொருளுமாகிய தொகு தியே. "அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு, என்னுங் குறளில் உலகு, என்றதீண் டுயிர்கண்மேனின் றது. காணப்பட்ட வுலகத்தாற் காணப்படாத கடவுட்குண்மை கூறவேண்டுதலின், ஆதிபகவன் முதற்றேயென உலகின்மேல் வைத்துக்கூறினர்; கூறினரேனும், உலகிற்குமுதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக்கொள்க" எனப் பரிமேலழகர் கூறுமாற் ருன் உயிர்த்தொகுதியே உலகென்பது புலப்பட்டது. வானின் றுலகம் பெருமை பிறங்கிற்றுலகு, உலகத்தோடொட்ட வொழு கல், மூவா முதலாவுலகம், உலகந்திரியா வோங்குயர் விழுச்சீர் எனப்பல விடங்களில் உலகின் பெற்றி யுணர்த்துவது மறியற் பாற்றாம்.

"காலமுலக முயிரே வுடம்பே விணையே பூதம்" என்ற தொல்காப்பிய நூல்பாவில் உலகம் என்றதற்கு ஆசிரியர் சேனு வரையரும் நச்சினர்க்கினியரும் மக்கட்டொகுதி யென்னும் எழுத்தொப்புமையானும் இருதிணையை யுணர்த்தும் என்றும் கூறுவது மறியற்பாலதே உலகமென்ற திடமுமாம். உலக மென்பது தமிழ் மொழியே. வடமொழித்திரிபன்றாம். மக்கட் டொகுதியை யுணர்த்துங்கால் சொல்லாலஃறிணையும் பொருளா னுயர்திணையும் ஆம். இடத்திணையுணர்த்துவழி பால் பகாவஃ றிணைப்பெயராம். இம்மொழி மலர்தலையுலகம் என்றவிடத்துஞ் சாரியையுற்றதென்றும், முதற்றேயுலகு என்ற விடத்தஃதுறுத தென்றுங் கோடல்வேண்டும்.

இனியவ்வுலகாயவா றியாதோவெனிற் கூறுதும். "அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி, என்னும் பெரும்பாணுற்றுப்படை முதலடியிற்கு நச்சனுர்க்கினியர் தன்னை யொழிந்த நான்கு பூத மும் தன்னிடத்தே யகன்று விரிதற்குக் காரணமாகிய பெரிய

ஆகாயம்' எனக்கூறுவதும். "அகலிருவிசும்பினானும்" எனும் எட்டாம் புறப்பாட்டடியும், "வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பு' என்றும் "அலங்கலிற் றோன்றும் பொய்ம்மையாவேன் பூதமைந்தும், விலங்கிய விகாரப்பாட்டின் பேறுபாடுற்ற வீக்கம்," என்றுங் கம்பர் கூறுவதுங் கொண்டு, உலகம் ஐம்பூத வேறுபாட்டாலாயது என்பது தெளிவாம். 'சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின், வகைதெரிவான் கட்டேயுலகு' என்ற விடத்தும் ஐயறிவுங் கூறப்பட்டு விளக்கப்படுகின்றது. தருக்கநூலார் கொண்டகொள்கையுமஃதே. அங்ஙனமாயின், அறிவுவகையானே வுயிர் வகுக்கப்படும். ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், என; இவைகளுள்: தக்கவின்ன தகாதன வின்னவென்றெக்கவுன்னுமறிவே பகுத்தறிவெனவும் அவ்வறிவுற்றஞான்று ஐயறிவொடு ஆறறிவுயிராகக் கருதப்படும்.' மக்க டாமேவாறறி வுயிரே" எனத் தொல்காப்பியனார் கூறுவது மதுவே. (தொடரும்)

மதிப்புரை

மரக்கறி உணவு: இந்நூல் டாக்டர் **முத்து லட்சுமி அம்மா** அவர்கள் M. B. C. M. M. L C சென்னைப் புலால் மறுத்தற் கழகத்தில், தலைமை மேற்கொண்டு செய்த சொற்பொழிவு. இதன்கண் உணவின் கட்டாயம், புலால்நோய்கள், 'வைடமின்' என்னும் ஜீவசத்து', இயற்கை வாழ்வு, தென்னிந்தியர்களின் உணவாராய்ச்சி, என்னுந் தலைப்புகளின் கீழ்ப் பல அரிய ஆராய்ச்சி முடிபுகளோடு மரக்கறியுணவின் கட்டாயமும் புலால் மறுத்தலும் வலியுறுத்தப்படுகின்றன. இதன் இறுதியில் அநுபந்த மொன்று சேர்க்கப்பட் டுள்ளது. அதன்கண் மரக்கறி யுணவைப்பற்றி ஆங்கிலப் பேராசிரியன்மார் கூறும் கருத்துக்களோடு 'ஆரஞ்சிப் பழத்தின் விசேஷ'மென் றொன்றுங் கூறப்பட்டிருக்கின்றது.

வேண்டுவோர் சென்னைப் புலால் மறுத்தற் கழக அமைச்சர், தாரக விலாசம், கெதீட்ரல் போஸ்டு, சென்னை' யென்ற விலாசத்துக்கு ஓரணு தபாற்றலை யனுப்பிப் பெற்றுக்கொள்க.

கலாநிலயம்: இது வியாழன்தோறும் வெளிவருவதான கிழமைத்தாள். இதன் முதற் பதினெட்டு இதழ்கள் இப்போது கைவரலாயின. ஆங்கிலமுந் தமிழும் நன்கு தேர்ந்த அறிஞர் பலரால் அரிய கட்டுரைகள் எழுதப்படுகின்றன. ஆண்டுக் கையொப்பம் ரூ. 7—8. வேண்டுவோர் நெ. 11, வெள்ளாளத்தெரு, புரசைபாக்கம், சென்னை என்னுமிடத்திற்கு எழுதுக.

தும்பன் ஆண்டு மடல்: இது கல்வித் திறமைவாய்ந்த பேரறிஞர்களின் சீரிய கட்டுரைகளையுங் கண்ணைக் கவர் படங்களையுங்கொண்டு திகழ்கின்றது. விலை ரூ. 1—4. தனவைசியன் கம்பெனி லிமிடெட், காரைக்குடி' என்று முகவரி எழுதிப் பெற்றுக்கொள்க.